# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 313 | ஞாயிறு, நவம்பர் 17, 2024 | 17 பக்கங்கள்


அகிலன்



## தமிழர்களின் கோட்டைக்குள் சிங்கள தேசியவாதக் கட்சி

## நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய நிலைப்பாடு தோல்வியடைந்ததா?

சர்வேந்திரா




## தமிழ்த் தேசியத்தின் உறுதியை மீண்டும் நிரூபித்த கிழக்கு மாகாண தமிழர்கள்

பா.அரியநேத்திரன்


info@ilakku.org



© 2024 இலக்கு இணையம்

## வடக்கு, கிழக்கில் 7,49,762 பேர் வாக்களிக்கவில்லை, வாக்களித்தோரின் 94,489 வாக்குகள் நிராகரிப்பு

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் 22,20,311 வாக்காளர்களைக் கொண்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில்14,70,549 பேர் வாக்களித்த நிலையில் 7,49,762 பேர் வாக்களிக்காததுடன் 94,489 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.



வடக்கு மாகாணத்தில் யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் 5,93,187 வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் 3,58,079 பேர் வாக்களித்த நிலையில் 2,35,108 பேர் வாக்களிக்கவில்லை. அதேநேரம் வாக்களித்த 3,58,079 பேரில் 32,767 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன இதற்கமைய 3,25,312 பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வன்னி மாவட்டம் 3,06,081 வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் 2,11,140 பேர் வாக்களித்த அதேநேரம் 94,941 பேர் வாக்களிக்கவில்லை.

வாக்களித்த 2,11,140 பேரில் 15,254 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 1,95,886பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் 3,30,049 பேர் வாக்களிக்காத நிலையில் 48,021 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் 4,49,686வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் 3,02,382 பேர் வாக்களித்த நிலையில் 1,47,304 பேர் வாக்களிக்கவில்லை. அதே நேரம் வாக்களித்த 3,02,382 பேரில் 15,329பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய 2,87,053 பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று திருகோணமலை மாவட்டம் 3,15,925 வாக்காளர்களை கொண்டுள்ள நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் 2,18,425பேர் வாக்களித்த அதே நேரம் 97,500 பேர் வாக்களிக்கவில்லை. வாக்களித்த 2,18,425 பேரில் 13,537 பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ள. இதற்கமைய 2,04,888பேரின் வாக்குகளே செல்லுபடியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## இஸ்ரேலின் போர் முறை இன அழிப்பாகும் - ஐ.நா



பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் போரியல் உத்திகள் இனஅழிப்புக்கு ஒப்பானது. பட்டினியையும் இஸ்ரேல் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றது. இஸ்ரேலின் படை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு குழுவினர் இந்த அறிக்கையை கடந்த வியாழக்கிழமை(14) வெளியிட்டுள்ளனர்.

பொதுமக்களுக்கு பாரிய உயிர்ச் சேதங்கள் காசாவில் ஏற்பட்டுள்ளன. அவர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்பட்டுள்ளனது. உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர். உணவு குடிநீர் மற்றும் எரிபொருள் விநியோகத்தை தடை செய்து அதனையும் ஒரு ஆயுதமாக இஸ்ரேல் பயன்படுத்துகின்றது.

காசா பகுதி மக்கள் உயிர் வாழ்வதற்கான அத்தியாவசிய பொருட்களையும், சேவை களையும் தடை செய்ய வேண்டும் என இஸ்ரேலிய அதிகாரிகள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## சீனாவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர்களை நியமித்த ட்ரம்ப்

அமெரிக்காவின் புதிய அரசதலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ள டொனால்ட் டிறம்ப் சீனாவுக்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர்களை பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத்துறைகளின் அதிகாரிகளாக நியமித்துள்ளது என்பது சீனாவுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை எதிர்காலத்தில் டிறம்ப் எடுக்கப்போகிறாரா என்ற கேள்விகளை எழுப்பியுள்ளது.



தேசிய புலனாய்வுத்துறையின் முன்னாள் தலைவர் ஜோன் ரட்கிளிப் சி.ஐ.ஏயின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். முன்னாள் படை அதிகாரியும், பொக்ஸ் ஊடகத்தின் ஆய்வாளருமான பீற் ஹெக்செத் பாதுகாப்புச் செயலாளராகவும், புளோரிடா மாநிலத்தின் காங்கிரஸ் சபை உறுப்பினர் மைக்கேல் வற்ஸ் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், எலிசேஸ்ரெபெனிக் ஐக்கிய நாடுகள்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## மக்கள் எதிர்பார்க்கும் தூய அரசியலை முன்னெடுப்பதே எதிர்பார்ப்பு: இம்ரான் எம்.பி

மக்கள் எதிர்பார்க்கும் தூய அரசியலை முன்னெடுப்பதற்கே எதிர்பார்க்கிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்டு திருகோணமலை மாவட்டத்தில் இருந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், மக்கள் எதிர்பார்த்த உண்மை நீதி நியாயமான தூய்மையான அரசியல் பயணத்தை முன்னெடுக்கவுள்ளோம். மக்கள் எதிர்பார்ப்பு மூலமாக சரியாக தங்களது உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளார்கள். இதன் மூலம் ஊழல் அற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மக்கள் எடுத்துள்ளார்கள்.

இதனால் மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும். உரிமைகள் அபிவிருத்தி விடயங்களில் மக்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்து செய்ய வேண்டிய வேலைகளை செய்து மக்கள் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற வேண்டும்.

மாவட்டத்தில் இம் முறை 14கட்சிகள் 17 சுயேட்சை குழுக்கள் என சுமார் 217 வேட் பாளர்கள் போட்டியிட்டனர். திருகோணமலை,மூதூர்,சேருவில என மூன்று தொகுதிகளில் இருந்தும் தேசிய மக்கள் சக்தி 87031 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சக்தி 53058 வாக்குகளையும், இலங்கை தமிழ் அரசு கட்சி 34168 வாக்குகளையும் பெற்றனர்.



தமிழ் மற்றும் முஸ்லீம் கட்சிகளில் இருந்து ஆளுங் கட்சி உறுப்பினராக அருண் ஹேமசந்திரவும் எதிர் கட்சியில் இருந்து இம்ரான் மஹ்ரூப், சண்முகம் குகதாசன் போன்றோர்கள் தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகளை அதிகம் பெற்றுள்ளனர். எதிர் காலத்தில் மக்களுடைய உரிமைகள் சார் விடயங்கள் உட்பட பல விடயங்கள் தீர்க்கப்பட வேண்டிய மாவட்ட மாக திருகோணமலை மாவட்டம் காணப்படுகிறது. தமிழர் தாயகத்தில் இவ்வாறான பிரச்சினைகளை இந்த அரசாங்கத்திலாவது இவர்கள் தீர்க்க அயராது முயற்சிக்க வேண்டும் என்றார்.

## குதீஸ் படையினரின் ஆயுதங்கள் குறித்து பென்ரகன் ஆச்சரியம்



ஏமன் குதீஸ் படையினரிடம் உள்ள ஆயுதங்கள் தமக்கு ஆச்சரியத்தை தருவதாக அமெரிக்காவின் பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் தெரிவித்துள்ளது என ஏசியோஸ் ஊடகம் கடந்த வியாழக்கிழமை(14) தகவல் வெளியிட்டுள்ளது.

பென்ரகனின் ஆயுத கொள்வனவு செய்பவரான பில் லாபி யேற்ரே இந்த வாரம் வாஷிங்டனில்( Washington) இடம்பெற்ற பாதுகாப்பு மாநாட் டில் உரையாற்றும்போது இதனை தெரிவித்திருந்தார் என அந்த ஊடகம் கருத்து வெளியிட்டுள்ளது.

இந்த குழுவினரின் தாக்குதல் திறன் எம்மை அச்சமடைய வைக்கின்றது. கடந்த ஆறு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## ஈரானின் தூதுவரை இரகசியமாக சந்தித்த மஸ்க்

இரு நாடுகளுக்குமிடையிலான பதற்றத்தை தணிப்பதற்கான முயற்சியாக ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈரானின் தூதுவர் இரகசியமாக சந்தித்து இலோன் முஸ்க் கலந்துரையாடியதாக த நியூயோர்க் ரைம்ஸ் நாளேடு கடந்த வியாழக்கிழமை(14) தெரிவித்துள்ளது.



அமெரிக்காவின் புதிய அதிபர் டொனால்ட் டிறம்பின் நெருங்கிய சகாவும், அவரின் தேர்தல் வெற்றிக்காக பாடுபட்ட

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## தேர்தலில் மகத்தான பெரும் வெற்றி- ஆழமான சீர்திருத்தங்களிற்கான ஆணையை வழங்குகின்றது:

## எரிக்சொல்ஹெய்ம்



இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள மகத்தான பெரும் வெற்றி ஆழமான சீர்திருத்தங்களிற்கான ஆணையை வழங்குகின்றது என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதான தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

**சமூக ஊடகப்பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-**

அனுரகுமார திசநாயக்க அல்லது மக்களால் ஏகேடி என அழைக்கப்படும் இடதுசாரி கூட்டணியின் தலைவர் இலங்கையில் முழுமையான தேர்தல் வெற்றியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றார். அனேகமாக அனைத்து தொகுதிகளிலும் அவர் வெற்றி பெற்றுள்ளார்.

**இது இலங்கைக்கு என்னதேவையோ அதனை செய்வதற்கான வலுவான வாக்குறுதியை வழங்குகின்றது.**

1. **நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு சிறந்த ஒப்பந்தத்திற்காக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளல்**
2. **பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமையில் சிக்கியுள்ளவர்களை அதன் பிடியிலிருந்து மீட்பதற்கான பொருளாதார சீர்திருத்தம்.**
3. **தேசிய நல்லிணக்கம் சிறுபான்மை தமிழர்கள் முஸ்லீம்களிற்கான உரிமைகள்.**
4. **ஊழலிற்கு எதிராக கடுமையான போராட்டம்**
5. **சுற்றுலாத்துறையில் பசுமை பொருளாதாரத்தை**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## சக ஜனநாயக நாடாக மக்கள் ஆணையை வரவேற்கிறோம் - தேர்தல் முடிவுகளையடுத்து இந்திய தூதர் ஜனாதிபதியை நேரில் சந்தித்து வாழ்த்து

“சக ஜனநாயக நாடாக, இந்தியா இந்த மக்கள் ஆணையை வரவேற்கிறது. மற்றும் நமது மக்களின் நலனுக்காக இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உறுதி பூண்டுள்ளது” என்று ஜனாதிபதி அநுரகுமாரவை நேற்று நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா.

இலங்கையின் 10ஆவது நாடாளுமன்றத் தேர்தல் நேற்று முன்தினம் நடந்தது. இதில், மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது.

இந்த வெற்றியைத் தொடர்ந்தே, இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா ஜனாதிபதி அநுர குமாரவை நேற்றைய தினம் நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்த முதலாவது வெளிநாட்டு இராஜதந்திரி இந்தியத் தூதுவரே என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன்போது, “சக ஜனநாயக நாடாக, இந்தியா இந்த மக்கள் ஆணையை வரவேற்கிறது. மற்றும் நமது மக்களின் நலனுக்காக இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உறுதி பூண்டுள்ளது” என்று ந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்தார்.

## ஈழத்தமிழர் இறைமைக்கு எதிரான சிங்கள இறைமையின் எழுச்சி

சிறிலங்காவின் பத்தாவது நாடாளுமன்ற ஆட்சி 21.11.2024 இல் தேசிய மக்கள் சக்தியினர் எந்த சட்டவாக்கத்தையும் செய்யக்கூடியதாக, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தெளிவாகச் சொன்னால் எந்த ஜே.வி.பி 1969 முதல் 2024வரை 55 ஆண்டுகள் ஈழத்தமிழரின் இறைமை ஒடுக்கத்துக்கும் தேசிய நீக்கத்துக்கும் ஈழத்தமிழின அழிப்புக்கும் ஆட்சியில் இருந்த சிங்கள அரசாங்களுக்குப் பக்கத்துணையாக இருந்ததோ அந்த ஜே.வி .பி இன்று சிங்கள தேசிய மக்கள் சக்தியாக நேரடியாகத் தனது ஆட்சியைத் தொடங்குகிறது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 80830 வாக்குகளும் வன்னி தேர்தல் மாவட்டத்தில் 39894 வாக்குகளும் கிடைத்து தேசிய மக்கள் சக்தி தமிழர்களாலும் ஏற்கப்படுகிறது என்ற கருத்துருவாக்கத்தை உலகுக்கு அளித்துள்ளது. இணக்கப்பாட்டு அரசியல் பேசியும் கணக்குக் கேட்டல் உத்தியை முன்னெடுத்தும் தமிழ்த் தேசிய வாக்குகளைச் சிதறுண்டு போகச் செய்து ஒவ்வொருவரும் ஈழத்தமிழர் தாயகத்தில் தேசிய மக்கள் சக்தி வெல்ல அறிந்தோ அறியாமாலோ உதவியுள்ளனர். இதனால் பாரம்பரியமான தமிழ்த் தேசியக் கட்சிகளான தமிழரசுக்கட்சியின் வாக்கு வங்கி 2020 இல் 112967 இல் இருந்து 2024 இல் 63327 ஆகவும் தமிழ்க் காங்கிரசின் வாக்கு வங்கி 2020 இல் 55303 ஆக இருந்து 27986 ஆகவும் இரண்டு கட்சிக்கும் அரைவாசியாக வாக்கினை வீழ்ச்சி அடையவைத்தது. அது மட்டுமல்லாமல் சங்குச்சின்னத்தில் போட்டியிட்ட சனநாயகக் தமிழர் கூட்டணிக்கு 22513 வாக்குகள் மட்டும் கிடைக்கவும், செல்வம் அடைக்கலநாதன் மட்டும் 25 ஆண்டுகளைத் தொடர்ந்து அடுத்த ஐந்து ஆண்டுகள் மீளவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் வைத்துள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணிக்கு 2020 இல் இருந்த 35927 வாக்குகளை 2024 இல் 13295 ஆக வீழ்ச்சி அடைய வைத்து பிரதிநிதித்துவ இழப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த இழப்புக்கள் ஈழத்தமிழர் இறைமை நீக்கமும் தேசிய நீக்கமும் நிறைவு அடையவைக்கக் கூடிய முறையில், ஏக்கிய இராஜ்ஜியம் என்கிற ஒரு நாடு ஒரு ஆட்சி முறைமையை அநுர ஆட்சியாக வெளிப்பட வைக்கும் என்பது பலரது கருத்தாகவும் உள்ளது. இதன்வழி ஈழத்தமிழர்களும் அவ்வரசின் சமுகங்களில் (Community) ஒன்று என ஏற்கின்றனர் எனச் சிங்கள ஆட்சியாளர் உலகுக்குப் பரப்புரை செய்ய உதவக்கூடிய வகையில் யாழ்ப்பாண வன்னி தேர்தல் மாவட்ட முடிவுகள் அமைந்துள்ளன.

இந்நிலை ஈழத்தமிழர்கள் தங்களுக்குத் தாங்களே சிறுபான்மையினர் எனச் செய்த வரைவிலக்கணத்தையும் அதன் வழி இதுகால வரை அவர்கள் பெற முயன்ற பாதுகாப்புக்களையும் கூட இனிப் பெற முடியாது மாற்றும். மேலும் உள்ளக பொறிமுறையுள் அனைத்தையும் கேட்க வேண்டிய இரண்டாந்தர மக்களாகச் செய்துவிடும்.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈழத்தமிழர் தங்களது வெளியகத் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்தி அனைத்துலக நாடுகள் அமைப்புக்களிடம் தங்களுக்கு அனைத்துலக சட்டங்களுக்கு ஏற்ப எந்த உதவியையும் பெற இயலாத நிலையையும் உருவாக்கிவிடும்.

இவை எல்லாமே ஒரு அணியில் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையை, "அது இறைமையை மீள நிலைப்படுத்தலே" என்ற உண்மையை உரக்கச் சொல்ல ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் மறுப்பதன் விளைவு என்பதே இலக்கின் உறுதியான எண்ணமாக உள்ளது. எது பேசப்பட வேண்டுமோ அது பேசப்படாததினால் சமுக உளவியல் உறுதியற்றதாக உள்ளது. எது செயற்படுத்தப்பட வேண்டுமோ அது செயற்படுத்தப்படாது உள்ளதால் ஈழத்தமிழ் மக்களிடை நம்பிக்கை வரட்சியும் பொருளாதார வெறுமையும் தமிழரல்லாத தமிழினப் பகைமைகளிடம் கூடத் தலைமைகளைத் தேட வைப்பதையே இந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவாக்கியுள்ளன. சிங்கள எழுச்சியான தேசிய மக்கள் சக்திக்கு இது இலங்கையர் என்ற பிரித்தானிய காலனித்துவ செயற்கை தேசியத்தை தனது ஒரு நாடு ஒரு சட்ட அமுலாக்கத்துக்கு உரிய சமகாலத் தேசியமாக மறுமலர்ச்சி அடைய வைத்தல், காலத்தின் தேவையாக உள்ளது. இதனை ஈழத்தமிழர்கள் ஒன்றுபட்டல்ல வேற்றுமைக்குள் இறைமையை முன்னெடுக்கும் ஆற்றலாளர்கள் அனைவரையும் அவர்களின் மாறுபட்ட ஆற்றல்களை மதித்துப் பொதுவெளியில் ஓரே இலக்கான ஈழத்தமிழர் இறைமையை வெளிப்படுத்தி நிலைப்படுத்திப் பாதுகாக்க இணைப்பதன் மூலம் ஒருமைப்பாட்டை நிறுவி தன்னாட்சியை உறுதிப்படுத்த முயலுங்கள் என்றே இலக்கு அழைக்கிறது.

இருப்பது எதையும் இருப்பவர் யாரையும் அழிக்க முயற்சிக்காது உள்ளவை அனைத்தினதும் வலிமையை சிறியனவாயினும் பெரியனவாயினும் ஈழத்தமிழருக்கு உரியதாக மாற்ற முயலுங்கள்- அது முடியும். இதற்கு வெட்டிப் பேச்சுக்களை எழுத்துக்களை சமுகவலைத்தளங்கள் வழி வளர்த்து மேலும் மேலும் பிரிவினைகளை வளர்க்காது குறைகாணின் நேருக்கு நேர் பேசி நிறைவாக்குவோம். நிறை காணின் தோள் கொடுத்து அதை பயனாக்குவோம். இதுவே சமுகமாக ஈழத்தமிழ் தேச இனத்தை மடைமாற்றம் செய்ய முயலும் தேசிய மக்கள் சத்தியின் செயற்பாடுகளைத் தடுக்க ஈழத்தமிழர் தேசமாக எழ ஒரே வழி. 21ம் திகதி சிறிலங்காவின் இன்றைய ஜனாதிபதி தனது தேசிய மக்கள் சக்தியின் கொள்கை விளக்க உரையை நிகழ்த்திய உடனேயே அது ஈழத்தமிழர் இறைமையை ஏற்று அதன் அடிப்படையில் ஈழத்தமிழரின் வரலாற்றுத் தாயகமாகவும் இலங்கைத்தீவு உள்ளது என்ற உள்ளுணர்வுடன் இலங்கைத்தீவின் பொருளாதாரத்தைப் பாதுகாத்திட இரு தேச இனங்களும் பங்காற்ற அழைத்தால் வரவேற்போம். இல்லையேல் எமது மண்ணையும் மக்களையும் பாதுகாக்க நாமே ஒருவருக்கு ஒருவர் துணையாக வேண்டும் என்பதே இலக்கின் இவ்வார எண்ணம்.

**ஆசிரியர்**

இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஆச்சரியமான பல நிகழ்வுகள நடந்துள்ளன. முதல் முறையாக தனியான ஒரு கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கைப்பற்றியிருக்கின்றது. தென்னிலங்கைக் கட்சிகள் எதுவும் கைப்பற்ற முடியாது என்று கருதப்பட்ட வடமாகாணத்தை தேசிய மக்கள் சக்தி தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருக்கின்றது.

தனியொரு கட்சியாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தி பெற்றிருப்பது முக்கியமானது. ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய நிறைவேற்று அதிகாரத்துக்கும் மேலாக, இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை, தமது நிகழ்ச்சி நிரலை தடையின்றி முன்னெடுக்கக்கூடிய அதிகாரத்தை அரசாங்கத்துக்குக் கொடுத்திருக்கின்றது.

இதனைவிட, வரலாற்றில் முதல் தடவையாக வடக்கு - கிழக்கில் தென்னிலங்கையைத் தளமாகக் கொண்ட கட்சி ஒன்று ஆதிக்கத்தைச் செலுத்தியிருக்கின்றது. வடக்கு கிழக்கு ஏதோ ஒரு தமிழ்த் தேசியக் கட்சியின் ஆதிக்கத்தின் கீழ்தான் இருந்திருக்கின்றது என்ற வரலாறு மாற்றப்பட்டுள்ளது. தமிழ்க் கட்சிகள் எவற்றினதும் ஆதரவின்றி வடக்கில் முன்னணிக் கட்சியாக தேசிய மக்கள் சக்தி வந்துள்ளது.



# தமிழர்களின் கோட்டைக்குள் சிங்கள தேசியவாதக் கட்சி

அகிலன்

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் அதிக வாக்குகளையும், அதிக ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்திதான் பெற்றிருக்கின்றது. அதேபோல, கிழக்கில் திருமலையும், அம்பாறையும் தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை.

சிங்கள மக்களைப் போலவே தமிழ் மக்களும் மாற்றம் ஒன்றை விரும்புகின்றார்கள். அதனைத் தமிழ்த் தலைமைகளும் புரிந்து கொண்டிருந்தார்கள். அதனால்தான், அந்த மாற்றத்தைக் கொண்டுவரக்கூடியவர்கள் தாமே எனச் சொல்லிக் கொண்டு சில தமிழ்க் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் களமிறங்கியிருந்தன. போர் முடிவுக்கு வந்து கடந்த பதினைந்து வருட காலத்தில் வடக்கு - கிழக்கில் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் எதனையும் கொண்டுவராத தமிழ்க் கட்சிகளை மக்கள் நிராகரித்துவிட்டனர்.

தமிழ்த் தலைமைகள் மீது மக்களுக்கு இருக்கின்ற சீற்றம், அதிருப்தி என்பனதான் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் மக்களுடைய பார்வை திரும்பியதற்குக் காரணமாக இருந்தது. தமிழ்க் கட்சிகளிடையிலான போட்டி, பிளவுகள், உட்கட்சி மோதல்கள் என்பன மக்களுக்கு தமிழ்க் கட்சிகளின் மீது அதிருப்தியை அதிகரித்திருந்தது. மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தி அவர்கள் முன்னெடுக்கும் சுயநல செயற்பாடுகளும், இவர்களுக்கு நாம் பாடம் படிப்பிக்க வேண்டும் என மக்கள் தீர்மானித்தமைக்கு காரணம்.

இந்த நிலையில் அவர்களுக்கு இருந்த ஒரே தெரிவு தேசிய மக்கள் சக்தியாக இருந்துள்ளது. தேசிய மக்கள் சக்தி கூட, இவ்வாறான பிரமாண்டமான ஒரு அங்கீகாரம் தமிழ்ப் பகுதிகளில் தமக்குக் கிடைக்கும் என்பதை எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான போட்டிகளும், வேட்பாளர் நியமனம் கிடைக்கவில்லை என்பதற்காக சுயேட்சைக் குழுக்களை அமைப்பது, அல்லது கட்சி தாவுவது மற்றும் உள்வீட்டுக் குழப்பங்களும் யாழ்ப்பாணத்தில் அதிகமாக இருந்தது. இது மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருந்த நிலையில், மாற்றுத் தலைமை ஒன்றைத் தேட வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது. அதன் விளைவாகத்தான் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி மூன்று ஆசனங்களைப் பெற்றது.

ஜனாதிபதித் தேர்தலின் போதும் அநுர அலை தென்பகுதியில் அடித்தது. அது வடக்கு, கிழக்கில் பெரிதாகத் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. சஜித் பிரேமதாச ஆதரவே வடக்கு, கிழக்கில் அதிகமாக இருந்தது. இரண்டு மாதங்களுக்குள் இந்த நிலை அதிரடியாக மாறிவிட்டது.

பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் தெரிவின்போது காணப்பட்ட குத்துவெட்டுக்கள், தமிழ்த் தேசியத்தின் பெயரால் எந்தளவுக்கு சுயநல அரசியலை தலைமைகள் செய்கின்றன என்பதை அம்பலமாக்கியது. ஆசன ஒதுக்கீட்டில் தமிழரசுக் கட்சித் தலைமை நடந்துகொண்ட முறை, மாம்பழம் சின்னத்தில் புதிதாக ஒரு சுயேட்சைக்குழு களமிறங்க வழிவகுத்தது. அந்த சுயேட்சைக் குழுவின் வரவு "திசைகாட்டி" மேலும் ஒரு ஆசனத்தை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்வதற்கு மட்டுமே உதவியது.

யாழ் மற்றும் வன்னித் தேர்தல் மாவட்டங்களில் ஒரே அணியாக தமிழ்த் தேசியக் கட்சிகள் களமிறங்கியிருந்தால், கள நிலையை மாற்றியிருக்க முடியும்.

தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் அதே வேளையில், தமிழ்த் தரப்பு பலவீனமாக இருப்பதால், எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய அபிலாஷைகளை எவ்வாறு பூர்த்தி செய்யப் போகிறோம் என்ற கேள்வி முக்கியமாக எழுகிறது. புதிய அரசியலமைப்பு ஒன்றைக் கொண்டுவரப்போவதாக ஜனாதிபதி அநுரகுமார கூறியிருந்தார். அவரது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அது இடம்பெற்றிருந்தது.

அதற்கான அங்கீகாரத்தை ஜனாதிபதித் தேர்தலின் போது மக்கள் அவருக்கு வழங்கியிருக்கின்றார்கள். அதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மை இப்போது அவர்களுக்கு கிடைத்துள்ளது. அதனால், அதற்கான முயற்சிகளை அவர்கள் முன்னெடுப்பார்கள். இதனை எதிர்கொள்வதற்குத் தேவையான பலத்துடன் தமிழ்த் தரப்பு இருக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்தவரையில் இப்போது தமிழரசுக் கட்சி எட்டு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒன்று, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்று என்ற வகையில் அவர்களது பாராளுமன்ற பலம் குறைவடைந்திருக்கின்றது. தமிழ்ப் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தியின் அதிகாரமே மேலோங்கியிருப்பதால், தமிழ்க் கட்சிகளின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவராக அநுரவே இருப்பார். தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றக் கூடிய வகையில் அவரது செயற்பாடுகள் அமையுமாயின், அடுத்த தேர்தலில் தமிழ்க் கட்சிகள் இதனைவிட இன்னும் மோசமான பின்னடைவை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

தமிழரசுக் கட்சி தனித்து எட்டு ஆசனங்களைப் பெற்றிருப்பது முக்கியமானது என்று எம்.ஏ.சுமந்திரன் கூறியிருக்கின்றார். ஆனால், வடக்கில் தமிழரசு படு தோல்வியைச் சந்தித்திருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் தோல்வியடைந்திருக்கின்றார். வன்னியில் கட்சியின் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் வெற்றி பெறவில்லை. கடந்த காலத்தில் தமிழரசுக் கட்சியின் நகர்வுகளைத் தீர்மானிப்பதில் இந்த இருவருமே முக்கியமானவர்களாக இருந்துள்ளார்கள். அந்தவகையில், இந்த இருவரது தோல்விகளும் கட்சியின் கடந்த காலச் செயற்பாடுகளில் மக்களுக்குள்ள அதிருப்தியை வெளிப்படுத்துபவையாகவே பார்க்கப்பட வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசை தமிழ்த் தலைமைகள் எவ்வாறு கையாள வேண்டும் என்ற கேள்வி இன்று பிரதானமாக எழுகின்றது. ஜே.வி.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# தமிழ்த் தேசியத்தின் உறுதியை மீண்டும் நிரூபித்த

# கிழக்கு மாகாண தமிழர்கள்

பா.அரியநேத்திரன்

நடந்து முடிந்த 10, வது நாடாளுமன்ற தேர்தல் இலங்கையில் ஒரு பெரும் மாற்றத்தை என் பதைவிட தன்னை விட்டால் ஆள் இல்லை (அவர்களை விட்டால்) என்ற மனோநிலையை சிங்கள மக்களாலும், தமிழ்மக்களாலும், முஸ்லிம் மக்களாலும் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு அங்கீ காரத்தை வழங்கி உள்ளது.

இதன் மாற்றம் என்பது கடந்த ஜனாதிபதி தேர்தலில் புதிய ஜனாதிபதியாக ஒரு இடதுசாரி கொள்கையுடைய கட்சியாக முன்னர் கருதப்பட்டாலும் தற்போது கலப்பு கொள்கை உள்ள ஒருகட்சியாக கருதப்படும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசநாயக்கா ஜனாதிபதியாக தெரிவானதன் பின்னர் உடனே பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நடைபெற்ற தேர்தல் என்பதால் மிகப்பெரிய அறுதிப்பெரும்பான்மை அவரின் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளது.

அதன் அடிப்படையில்.

1. தேசிய மக்கள் சக்தி (NPP) – 6,863,186 வாக்குகள் (159 ஆசனங்கள்).
2. ஐக்கிய மக்கள் சக்தி (SJB) – 1,968,716 வாக்குகள் (40 ஆசனங்கள்)
3. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி (ITAK) – 257,813 வாக்குகள் (8 ஆசனங்கள்)
4. புதிய ஜனநாயக முன்னணி (NDF) – 500,835 வாக்குகள் (5 ஆசனங்கள்)
5. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) – 350,429 வாக்குகள் (3 ஆசனங்கள்)
6. சர்வஜன அதிகாரம் (SB) - 178,006 வாக்குகள் (1 ஆசனம்)
7. வேறு கட்சிகள் - 945,533 வாக்குகள். (9 ஆசனங்கள்)

இவ்வாறு தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள் ளன.

தென்பகுதி மக்கள் மாற்றம் வேண்டும் என்பதற்காக,ஊழலை ஒழிக்க வேண்டும் என்பதற்காக அப்படி பெரும் எடுப்பில் "திசைகாட்டிக்கு" ஆணை கொடுத்தார்கள் என்பது உண்மை.

ஆனால் வடக்கு கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தை தவிர்த்த ஏனைய யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, அம்பாறை மாவட்ட தமிழ்மக்களும் கணிசமான வர்கள் ஏன் தேசிய மக்கள் சக்திக்கு பெரும் அளவானவர்கள் வாக்களித்து தமிழர்களின் அடிப்படை கொள்கையாக உள்ள இணைந்த வடகிழக்கில்சுயநிர்ணய உரிமைக்கானதேவையை ஒற்றையாட்சிக்குள் கரைத்து விட்டார்கள் என்ற சந்தேகம் பலரிடம் உள்ளது.

அதிலும் வன்னி, திருகோணமலை, அம் பாறை மாவட்டங்களை பொறுத்தவரை தமிழ் மக்களை விட சிங்கள, முஸ்லிம் மக்களின் பெரும்பான்மை அல்லது ஆதிக்கம் இருப்பதால் இப்படி தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தனர் என்று கூட கூறிவிட்டு கடந்து செல்லலாம்.

ஆனால்தனித்துவம்மிக்கதும்தமிழ்த்தேசிய அரசியலின் அடிநாதமாகவும், அத்திவாரமாகவும், ஆணிவேராகவும்,தமிழ்த்தேசிய விடுதலை இயக் கங்களின் தலைவர்கள் பிறந்த மண்ணாக கருதப் படும்மற்றவர்களுக்குதலைதாங்கிவழிகாட்டியாக செயல்படும் இன்னும் சொல்வதானால் தந்தை செல்வா, தலைவர் பிரபாகரன், தியாகி திலீபன்,



கரும்புலி மில்லர், குட்டிமணி, ஜெகன், போன்ற விடுதலை வீரர்களும் தியாகிகளும் பிறந்த யாழ்ப்பாணமாவட்ட மக்கள் அதிகப்படியான வாக்குகளை "திசைகாட்டி" சின்னத்திற்கு அள்ளி வழங்கி ஜே வி பி எனப்படும் தேசிய மக்கள் சக்திக்குஆணைவழங்கியமை படுதுரோகமாகவே கருதப்படும்.

வாக்களித்தமைக்கு பல காரணங்களை கூறலாம் பூசி மினுக்கலாம் ஆனால் அந்த கட்சிக்கு ஆணை வழங்கியதில் இருந்து வெளிக்காட்டும் விடயங்கள். 1948, தொடக்கம் இன்றுவரை 75, வருடங்களாக கட்டிக்காத்த தமிழ்த்தேசிய கொள்கை பற்றை நாசம் செய்துள்ளனர்.

அவர்களுக்கு வாக்களித்ததால்...

1. இணைந்த வடகிழக்கை 2006, ல் ஜே வி பி நீதிமன்றத்தில் வழக்குப்போட்டு பிரித்தது அது சரி என்பதை யாழ்மாவட்ட தமிழ் மக்கள் நிரூபித்துள்ளனர்.
2. சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தேவை யில்லை என்பதை நிரூபித்துள்ளனர்.
3. இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வேண்டாம் என்பதை நிரூபித்துள்ளனர்.
4. மாகாணசபை முறைமை தேவையற்றது என்பதை நிரூபித்துள்ளனர்.
5. ஊழலும், மோசடிகளும் தான் நாட்டின் பிரதான பிரச்சினை இனப்பிரச்சினை இல்லை என்பதை நிரூபித்துள்ளனர்.
6. இணைந்த வடகிழக்கு தேவையில்லை என்பதை நிரூபித்துள்ளனர்.
7. சர்வதேச விசாரணை தேவையற்றது என்பதை நிரூபித்துள்ளனர்.
8. இறுதி போரில் சிங்கள இளைஞர்களை முள்ளிவாய்க்காலில் இராணுவத்துடன் சேர்ந்து தமிழினப்படுகொலை செய்தது சரி என்பதை நிரூபித்துள்ளனர்.

இப்படியான பல விடயங்களுக்கும் தமிழ் மக்கள் ஆதரவு என்பது இந்த தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டியுள்ளன என்பதை புரியாமல் இருக்க முடியாது.

தமிழ்த்தேசியவிரோதங்களுக்குதுணைபோ கும் தேசிய மக்கள் சக்கதியின் கொள்கையை யாழ்ப்பாணத்து தமிழ்மக்கள் நிரூபித்துவிட்டனர் என்பதே இந்த தேர்தல் முடிவு வெளிப்படையாக கோடிட்டு காட்டியுள்ளது.

ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும்ஒருசிலதமிழ்மக்களும்,முஸ்லிம் மக்களும் இணைந்து ஒரு ஆசனத்தை மட்டும் தேசிய மக்கள் சக்திக்கு பெற்றுக்கொடுத்தாலும் 90, வீதமான தமிழ்மக்கள் தமிழ்த்தேசியத்தின் உறுதியை அதன் தேவையை உலகத்துக்கும் மீண்டும் பறை சாற்றி வடகிழக்கு தமிழ்மக்களின் உறுதியின் வெளிப்பாட்டை வாக்குச்சீட்டால் காட்டியுள்ள னர்.

இலங்கையில் உள்ள 22, தேர்தல் மாவட் டங்களில் 21, மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தியின் "திசைகாட்டி" சின்னத்துக்கு வாக்களித்து முதலாம் இடத்தில் தேசிய மக்கள் சக்தி உயர்த் தப்பட்டது.

ஆனால் ஒரேயொரு மாவட்டமான மட்டக் களப்பு மாவட்டம் மட்டுமே அதற்கு துணை போகாமல் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியை முதன்நிலை படுத்தி மூன்று ஆசனங்களை பெற்றுக் கொடுத்தது.



இதேவேளை அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலும் தமிழரசுகட்சி தலா ஒரு ஆசனங்களை பெற்று கிழக்கு மாகாணத்தில் தனித் துவத்தை தமிழ்த்தேசிய உறுதியை நிரூபித்துள் ளமை பாராட்டப்பட வேண்டியது.

**இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியில் இருந்து வடக்கு கிழக்கில் இம்முறை தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களின் விபரம்**

1. சி. சிறிதரன்(யாழ்மாவட்டம்)
2. இரா.சாணக்கியன்(மட்டக்களப்பு மாவட்டம்)
3. ஞா.ஸ்ரீநேசன் (மட்டக்களப்பு மாவட்டம்)
4. இ.ஸ்ரீநாத்(மட்டக்களப்பு மாவட்டம்)
5. க.கோடீஷ்வரன்(அம்பாறை மாவட்டம்)
6. ச.குகதாசன்(திருகோணமலை மாவட்டம்)
7. க.ரவிகரன்(வன்னி, மாவட்டம்)
8. (தேசியபட்டியல் உறுப்பினர்)

கடந்த 2009, மே,18, போர் மௌனம், முள்ளி வாய்கால் அவலம் ஏற்பட்டு 15, வருடங்கள் கடந்த நிலையில் வடக்கு கிழக்கு தாயக தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமை ஈனமும் குறிப்பாக இலங்கைத்தமிழ் அரசியல் கட்சிக்குள் ஏற்பட்ட உள் முரண்பாடுகளும் மக்கள் மத்தியில் ஏற்பட்ட வெறுப்பும், விரக்தியும் இந்த பொதுத்தேர்தலில் வடமாகாணத்தில் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி மீதுவெறுப்பைஏற்படுத்தியதும்ஒருகாரணமாகும்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# நாடாளுமன்றத் தேர்தலில் தேர்தலில் தமிழ்த் தேசிய நிலைப்பாடு தோல்வியடைந்ததா?

சர்வேந்திரா

**நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் 2024 - சில அவதானங்கள்**

2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகி விட்டன. 159 ஆசனங்களைப் பெற்று, 2/3 பெரும்பான்மைக்குத் தேவையான 150 ஆசனங்களுக்கும் அதிகமான ஆசனங்களை NPP பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் முன்னர் எனது நண்பர் ஒருவரைச் சந்தித்த NPP முக்கியஸ்தர் ஒருவர் ‘ நாங்கள் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவோம். அதன் பின் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 160 ஆசனங்கள் கைப்பற்றுவோம்’ என உறுதியாகக் கூறியுள்ளார். இத் தகவலை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே நண்பர் என்னிடம் சொன்னார்.

இப்போது 159 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. 160 யைக் குறிவைத்து அடித்து 159 இனை விழுத்தியிருக்கிறார்கள். வைத்த குறியில் சில விழாமலும் போயிருக்கலாம். எதிர்பாராமலும் சில விழுந்திருக்கலாம்.மட்டக்களப்புத் தேர்தல் மாவட்டம் தவிர்ந்த ஏனைய இடங்களில் முன்னணிக்கட்சியாகவும் NPP வந்திருக்கிறது. இவர்களின் வெற்றி தற்செயலானது அல்ல; திட்டமிட்டுச் செயலாற்றுகிறார்கள் என்பது நன்கு தெரிகிறது.

தமிழர் தாயகத்தில் இத் தேர்தல் முடிவுகள் குறித்து சில அவதானங்களை இங்கு பதிவு செய்கிறேன். ஒப்பீட்டுக்காக 2020 ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகளைஎடுத்துள்ளேன். கட்சிகளின் பெயர்களுக்காகப் பல இடங்களில் சின்னங்களையும் பயன்படுத்தியுள்ளேன்.

1. 2024 தேர்தலில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் ( ஈழத் தமிழர் ஒரு தேசம்/தேசிய இனம்) கொண்ட கட்சிகள் வடக்கு கிழக்கில் 10 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றன.(வீடு 8, சைக்கிள் 1, சங்கு 1). 2020 ஆண்டுத் தேர்தலில் இது 13 ஆக இருந்தது( வீடு 10, சைக்கிள் 2, விக்கி - 1).

2020இல்7ஆகஇருந்தயாழ்தேர்தல்மாவட்ட ஆசனங்கள் இம்முறை 6 ஆகக் குறைக்கப்பட்டிருந்தன.7ஆசனங்கள்இருந்திருந்தால்சங்குஒருஆசனம் பெற்றிருக்கும். இக் குறைப்பைக் கவனத்திற் கொண்டால், வடக்கு கிழக்கு மாகாணங்களில் 2 ஆசனங்கள் தேர்தல் பெறுபேறு அடிப்படையில் இழக்கப்பட்டடிருக்கின்றன.

2. யாழ் தேர்தல் மாவட்டத்தில் இம் முறை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் 2 ஆசனங்களைப் பெற்றுள்ளன.( ஊசியைச் சேர்க்கவில்லை. சேர்த்தால் 3). சங்குக்கு கிடைத்திருக்கக் கூடிய ஒரு ஆசனம் 16 வாக்குகளால் NPP யிடம் பறி போயுள்ளது. 2020 இல் இது 5 ஆக இருந்தது. ஆசனங்கள் சார்ந்து இது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதொரு பின்னடைவு.

3. இதேவேளை யாழ் தேர்தல் மாவட்டத்தில் வாக்குகள் அடிப்படையில் வாக்குகளின் வீழ்ச்சி ஆசனங்களின்வீழ்ச்சியுடன்ஒப்பிடும்போதுபோது அதிகமில்லை. 2020 யை விட 2024 இல் ஏறத்தாழ 19,000 வாக்குகள் குறைவடைந்திருக்கின்றன.

2024 ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக 149,197 வாக்குகளும் 2020 ஆண்டில் 168. 270 வாக்குகளும் கிடைத்திருப்பதாக ஒரு தரவு கூறுகிறது. டக்ளஸ், அங்கயன் தரப்புக்கு இத் தடவை ஏறத்தாழ 30,000 வாக்குகள் கிடைத்திருக்கின்றன. 2020 ஆம் ஆண்டு இது ஏறத்தாழ 96,000 ஆக இருந்தன. இவ்வாறு குறைவடைந்த 66,000 வாக்குகள் இத் தடவை NPP க்கு கிடைத்த 80,830 வாக்குகளுக்குள் விழுந்திருக்க வேண்டும் என ஒரு கணிப்புத் தெரிவிக்கிறது.

4. யாழ்ப்பாணத்தில் ஊசிக்கு விழுந்த வாக்குகள் குறித்த கவலை பலருக்கு உண்டு. வாக்களித்த மக்களின் மனநிலையை இவ் விடயத்தில் புரிந்து கொள்ள முடியவில்லை என்ற கருத்தும் உண்டு. பலரும் பேசத் தயங்கிய ஒரு விடயத்தைத் துணிந்து முதலில் பேசியவர் என்ற எண்ணம் குறிப்பிட்டளவு மக்களின் மனதில் பதிந்து விட்டது போலும். சிறை சென்றவர் என்ற அனுதாபமும் இருந்திருக்கக் கூடும்.



எனது நண்பர் ஒருவர் தேர்தலுக்கு முன்னர் சொன்னார். ‘நான்பலதேர்தல்வீடியோக்கள்பாக்கிறனான். ஒருத்தருக்கும் இல்லாத அளவுக்கு சனம் ஆளுக்கு கிட்டப் போகுது. விருப்பத்தோடை கதைக்குது. சனத்தைக் கவருர ஏதோ ஒண்டு ஆளிட்டைஇருக்குது’. ஊசிக்கு1ஆசனம்வரக்கூடும் என்றும் சொன்னார். அது நடந்திருக்கிறது.

5. வன்னி தேர்தல் மாவட்டத்தில் இம்முறை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு 2 ஆசனங்கள் கிடைத்துள்ளன. 2020 இல் இது 3 ஆக இருந்தது. இங்கும் இதுவொரு பின்னடைவுதான்.

6. வாக்குகள் சார்ந்து இத் தடவை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக ஏறத்தாழ 60,000 வாக்குகள் வன்னித் தேர்தல் தொகுதியில் கிடைத்துள்ளன. 2020 இல் இது ஏறத்தாழ 89,000 ஆக இருந்தது. வாக்குகளில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி உண்டு.

7. வடக்கில், இரண்டு தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளாத கட்சி NPP முதன்மை இடத்துக்கு வந்தமை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு குறியீட்டு வடிவில் பெரிய பின்னடைவுதான். தமிழ்த் தேசிய நிலைப்பாடு தோல்வியடைந்து விட்டது என்ற பரப்புரைக்கும் இது காரணமாகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உடைவு வந்திருக்காவிடின் இது நிகழ்ந்திருக்காது. இவ் இரண்டு மாவட்டங்களிலும் வீட்டுக்கும் சங்குக்கும் கிடைத்த வாக்குகளைக் கூட்டிப் பார்த்தால் தமிழத் தேசிய நிலைப்பாடே முதல் இடத்தில் வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 1 போனஸ் ஆசனமும் மேலதிகமாகக் கிடைத்திருக்கும். இவ் உடைவுக்கு எவரெவர் காரணமாக இருந்தார்களோ, அவர்கள்இதற்குப்பொறுப்பேற்க வேண்டும்.

8. வடக்கில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளின் வாக்குகள் 2004 ஆண்டுடன் ஒப்பு நோக்கும் போது ஒவ்வொரு தடவையும் குறைவடைந்து வருகின்றது. கட்சிளுக்குள் ஏற்பட்ட பிளவுகளும், முரண்பாடுகளும், மக்கள் மயப்பட்ட செயற்திட்டக் குறைபாடு, பொது வாழ்வில் தூய்மை குறித்துக் கிளம்பும் சந்தேகம் போன்றவை இதற்குக் காரணமாக அமைகின்றன.

9. வடக்கில் ஏற்பட்ட சரிவை கிழக்கு மாகாணம் ஒரளவு தாங்கிப் பிடித்துள்ளது. இத் தேர்தலில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக 5 ஆசனங்கள் இங்கு கிடைத்துள்ளன. 2020 இல் இது 3 ஆக இருந்தது. மட்டக்களப்பில் 1 ஆசனம் அதிகமாகக் கிடைத்துள்ளது. கடந்த தடவை தவறிப் போன அம்பாறை மாவட்டப் ( நான் திகாமடுல்ல எனக் குறிப்பிடவில்லை) பிரதிநிதித்துவம் இத் தடவை கிடைத்துள்ளது. திருமலையில் கடந்த தடவை போல 1 ஆசனம் கிடைத்துள்ளது.

10. கடந்த தடவை அம்மாறை மாவட்ட தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைக்கமல் போனமைக்கு கருணா அங்கு போட்டியிட்டமையால் தமிழ் வாக்குகள் பிரிந்து போனதே காரணமாகப் பார்க்கப்பட்டது. இத் தடவை தமிழ் ஆர்வலர்கள் கருணாவுடன் முன்கூட்டியே கதைத்து இம்முறை அங்கு கருணா போட்டியிடுவதைத் தவிர்க்க வைத்துள்ளார்கள் என்ற தகவலையும் அறிய முடிந்தது. சங்கு தனியாகக் போட்டியிட்டாலும் அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

11. வாக்குகள் சார்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் வீடு NPP யினைத் தோற்கடித்துள்ளது. இம் மாவட்டத்தில் இத் தடவை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக ஏறத்தாழ 114,000 வாக்குகள் கிடைத்துள்ளன. 2020 இல் இவ் வாக்கு எண்ணிக்கை ஏறத்தாழ 93,000 ஆக இருந்தது. இத் தடவை மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசிய ஆதரவு வாக்குகள் அதிகரித்துள்ளன.

12. அம்பாறை மாவட்டத்தில் இத் தடவை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக ஏறத்தாழ 42,000 வாக்குகள் கிடைத்துள்ளன. 2020 இல் இது ஏறத்தாழ 25,000 ஆக இருந்தது. இங்கும் வாக்கு அதிகரிப்பு நிகழ்ந்துள்ளது.

13. திருமலையில் இத் தடவை தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக ஏறத்தாழ 36,000 வாக்குகள் கிடைத்திருக்கின்றன. 2020 இல் இத் தொகை ஏறத்தாழ 45,000 ஆக இருந்தது. வாக்கில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

14. ஒட்டுமொத்தமாக நோக்கும்போது கிழக்கை விட வடக்கில் தமிழ்த் தேசிய நிலைப்பாடு கூடுதல் நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பது தெரிகிறது. தமிழ்ப் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அக்கறை கிழக்கில் அதிகம். அம்பாறையில் போட்டியிடுவது தொடர்பாக

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# சிறிலங்காவின் 10ஆவது நாடாளுமன்றத் தேர்தல்

# கற்றுத்தரும் பாடங்கள்...!

சிறிலங்காவில் ஜனாதிபதித் தேர்தல் கடந்த செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெற்று முடிந்த கையோடு அவசர அவசரமாக நடத்தி முடிக்கப்பட்ட பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் முடிவுகள் உள்நாட்டில் மட்டுமல்லாது,உலக நாடுகளிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத் தியுள்ளது. இதன் முடிவுகள் குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய அரசியல் வாதிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் காலத்தில் இருந்தே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கீழ் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டபொழுது வடக்குக் கிழக்கு மாகாணத்தில் 18 ஆசனங்களைக் கைப்பற்றி தமிழ் மக்களின் பேரம்பேசும் சக்தியாகவும், தமிழ் மக்களின் தன்னிகரில்லாத ஏகபோகக் கட்சியாக வும் விளங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சிதறுப்பட்டு அநாதரவாக நடுத்தெருவில் நிற்கின்றது.

**இந்தத் தேர்தலில் ஏற்பட்ட மாற்றங்களும் அவற்றின் விளைவுகளும்:**

தென்னிலங்கையின் அரசியல் கட்சி ஒன்று வடக்கைக் கைப்பற்றியமை. தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் மூன்று ஆசனங்களைப் பெற்று வரலாற்றுச் சாதனையைப் படைத்தமை

தமிழ் மக்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்று தம்மைத்தாமே அழைத்து வந்த தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் எந்த ஒரு ஆசனத்தையும் பெறாது மக்களால் தூக்கி எறியப்பட்டமை



கடந்த 30வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராக இருந்து ஒவ்வொரு ஜனாதிபதியின் கீழும் அமைச்சராகக் கோலோச்சி வந்த டக்ளஸ் தேவானந்தா மக்களால் தூக்கி எறியப்பட்டமை சிங்களக் கட்சிகளுடன் சேர்ந்து செயற்பட்டு அமைச்சர்களாக இருந்த அங்கஜன் இராமநாதன், பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திர காந்தன், கருணா எனப்படும் முரளிதரன், கோவிந்தன் கருணாகரன்,புளொட் அமைப்பின் சித்தார்த்தன் போன்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே படுதோல்வி அடைந்தமை.

விகிதாசாரத் தேர்தல் முறையின்கீழ் எந்தக் கட்சியுமே மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுக்கமுடியாது என்ற நிலையை மாற்றி அனுராவின் கட்சி மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்கயைப் பெற்றுத் தனிப்பெரும் கட்சியாக விளங்குகின்றமை

வழமையான தேர்தல்களை விட அதிகளவிலான பெண்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவானமை. ஆனால் வடக்குக் கிழக்கில் பெண் களுக்கான ஆசனங்கள் இல்லாமல் போனமை.

தமிழரசுக்கட்சி மிகக் குறைந்த வாக்குக ளையும்,ஆசனங்களையும் பெற்றுப் படுதோல்வி அடைந்தமை.ஆனால் மட்டக்களப்பு மாவட் டத்தில் மட்டும் மக்கள் தனிநபரைக் கவனத்தில் எடுக்காது கொள்கைக்கே வாக்களித்து தமிழரசுக் கட்சிக்கு மூன்று ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்துத் தமிழர்களின் மானத்தைக் காத்தனர்.

**வல்வை ந.அனந்தராஜ்**
எழுத்தாளர், முன்னாள் வடமாகாண சபை கல்விப்பணிப்பாளர்

இவ்வாறான படுதோல்வியைச் சந்தித்த தமிழரசுக் கட்சி ஏன் இவ்வாறான பின்னடைவைச் சந்தித்தது என்பதற்கு எல்லோரும் தெரிவிக்கும் ஒரே காரணம் திரு.சுமந்திரன்தான் என்பதை நினைக்கும் பொழுது அவரை வடக்குக் கிழக்குக்கு அழைத்துவந்த தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் இரா. சம்பந்தன் தான் என்பதை நினைக்கும் பொழுது கவலையாகவும் கோபமாகவும் வருகின்றது.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் முடிவுகளை அடுத்துக் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் ரணில் விக்கிரமசிங்காவின் ஆலோசகராகஇருந்துஐக்கியதேசியக்கட்சியினரை வழிநடத்திய ஜனாதிபதி சட்டத்தரணி திரு. மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் அவர்களைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் வடக்குக் கிழக்குக்கு அழைத்துவந்து அவரைத் தேசியப் பட்டியலின் பாராளுமன்ற உறுப்பினராக பின்கதவு வழியாக நியமித்தைத் தொடர்ந்து திரு.ம.ஆ.சுமந்திரன் தமிழர் அரசியலில் ஒரு சிரேஸ்ட உறுப்பினனராக உள்வாங்கப்பட்டார். அன்று தமிழர் அரசியலில் அவர் உள்வாங்கப் பட்டதைத் தொடர்ந்து படிப் படியாக எல்லோரையும் ஓரங்கட்டி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளராகத் தன்னைத்தானே உயர்த்திக் கொண்டார்.



அவரது வருகையின் அடிப்படையான நோக்கமாக தமிழர்களின் அரசியலைப் பலவீனப் படுத்தி தென்னிலங்கையின் அரசியலின்கீழ் தமிழ் மக்களை அடிமைகளாக வைத்திருப்பதுடன் அவர்கள் ஒரு தேசமாகத் தம்மைக் கட்டமைத்துத் தம்மைப் பலம் வாய்ந்த ஒரு அமைப்பாக இருக்க விடக்கூடாது என்பதையே கொண்டிருந்தது.

அதன் ஒரு கட்டமாக ஆசனப் பகிர்வில் ஏற்பட்ட குளறுபடிகள், ஏமாற்று வேலைகள் மற்றும் முரண்பாடுகள் காரணமாக தமிழ் காங்கிரசுக் கட்சியின் தலைவர் திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திரு.சுமந்திரனுடன் முரண் பட்டுக்கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்தும் வெளியேறி தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ற புதிய கட்சியை உருவாக்கி முதலாவது பிளவை ஏற்படுத்தினார்.அவருடன் ஆற்றல்கள் நிறைந்த பல இளைஞர்கள் வெளி யேறியதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பலம் பாதியாகக் குறைக்கப்பட்டது.



அதனைத் தொடர்ந்து இந்திய, இலங்கை இராணுவத்தினருடன் இணைந்து செயற் பட்டுப் பின்னர் ஜனநாயக வழிக்குத் திரும்பி தமிழ் மக்களுடன் சேர்ந்து வேலைத் திட்டங் களை மேற்கொண்டு வந்த ஈபிஆர்எல்எப், ரெலோ, புளொட், ஜனநாயகப் போராளிகள் கட்சி போன்றனவும் திரு.சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் ஆரம்பத்தில் இணைந்திருந்து, பின்னர் அதில் இருந்தும் விலகித் தனிவழிப் பாதையில் செல்லத் தொடங்கியது. ஏனைய போராளிக் கட்சிகள் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்ற புதிய கட்சியின்கீழ் தனியான ஒரு அமைப்பாகச் செயற்படத் தெடங்கினர். இவர்கள் ஆரம்பத்தில் குத்துவிளக்குச் சின்னத்தைக் கொண்டிருந்தவர்கள் பாராளுமன்றத் தேர்தல் வரத் தொடங்கியதும் ஏற்கனவே வேறு ஒரு நோக்கத்திற்காகப் பயன் படுத்தி மக்கள் மனதில் நிறைந்திருந்த சங்கு சின்னத்தைத் தமது தேர்தல் சின்னமாக எடுத்துக்கொண்டு தேர்தலில் முகம் கொடுக்க ஆரம்பித்தனர். திரு.சுமந்திரன் அவர்களின் பிரித்தாளும் தந்திரங்களினால் ஒன்றாக இருந்து பலமாக இயங்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பை மேலும் பலவீனப்படுத்தியதால், தமிழரசுக் கட்சி மீண்டும் தனியான கட்சியாக வீட்டுச் சின்னத்தில் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தது. இந்தநிலையில் ஒன்றாக பலமாக இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு,திரு.சுமந்திரனின் விடாமுயற்சியினால் இரண்டாகிப் பின்னர் மூன்றாகி, நான்காகப் பிளவடைந்து நிற்கின்றது. அதேவேளை தமிழரசுக் கட்சிக்குள்ளேயே உட்கட்சிப் பூசலை திரு.சுமந்திரன் ஏற்படுத்தினார். திரு.சிவஞானம் சிறிதரன் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்த திரு.சுமந்திரனால், நீதி

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# 1987இன் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைப் படுகொலைகள்...!

## பகுதி – 4



வல்வை ந.அனந்தராஜ்
எழுத்தாளர், முன்னாள் வடமாகாண சபை கல்விப்பணிப்பாளர்

ஆம்புலன்ஸ் சாரதியாக வேலை பார்த்த அப்பா பணி நிமித்தம் வைத்தியசாலை விடுதியில் தங்கியிருந்தார். அன்றைய அசாதாரண சூழ்நிலையில் தொடர்ச்சியாக பணியாற்றிக் கொண்டிருந்த அவர், கிடைத்த சிறிய இடைவேளையில் எங்களைப் பார்க்க வந்தார். கலவரத்துடன் இருந்த எங்களது முகங்களைப் பார்த்த அவரது முகத்தில் மிகுந்த கவலை தென்பட்டது. ஏனெனில் எங்களை தனியே விட்டுச் செல்ல முடியாது. கடைசித்தம்பி அப்பாவைக் கட்டிப்பிடித்து அழுதான். சிறிது நேரம் யோசித்த அவர், 'எல்லாரும் என்னோட வந்து விடுதியில் தங்குங்கோ, வைத்தியசாலைதானே பாதுகாப்பாயும் இருக்கும்' எனச் சொன்னார். நாங்களும் அப்பாவுடன் போவதற்குத் தயாரானோம். அப்போது என்னுடைய நண்பனிடம் நாங்கள் வைத்தியசாலைக்குச் செல்லும் விடயத்தை கூறினேன். அவன் தானும் எங்களுடன் வருவதாகக் கூறி, அவனுடைய பெற்றோரிடம் சொல்லிவிட்டு வந்தான். அத்துடன் உறவினர் ஒருவரின் மகளான பிரியாவும் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) எங்களுடன் வந்தாள். மூன்று தம்பிகள், நான், அம்மா, மற்ற இருவரும் சேர்த்து மொத்தமாக ஏழு பேர் யாழ் போதனா வைத்தியசாலையில் அப்பாவுடன் விடுதியில் தங்கினோம்.

இந்திய அமைதிப்படை நிலைகொண்டிருந்த முகாம்களில் ஒன்றான கோட்டை முகாம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து கிட்டத்தட்ட ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்தது. அங்கிருந்த இராணுவம் முன்னேறுவதற்கு தனது கடுமையான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. அதனால் நகரம் மற்றும் நகரத்தை அண்டிய பகுதிகள் எங்கும் எறிகணைகள் சரமாரியாக வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. வைத்தியசாலை பாதுகாப்பானது எனக் கருதியிருந்தாலும், அங்கு கேட்டுக்கொண்டிருந்த கடுமையான எறிகணைச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் விமானப்படை தாழப்பறந்து நடாத்திய குண்டுவீச்சுத் தாக்குதல்களும் அச்சத்தையே தந்து கொண்டிருந்தன. ஆயினும் இராணுவம் வைத்தியசாலைக்குள் தாக்குதல் நடத்தாது என்ற நம்பிக்கை எல்லோரிடமும் இருந்தாலும் எறிகணைத் தாக்குதல்கள் செறிவாக நடைபெறும்போது, அப்பாவின் விடுதிக்கு அருகில் இருந்த கதிரியக்கப் பகுதி மற்றும் பிரதான அலுவலகத்தை உள்ளடக்கிய மேல் மாடிக் கட்டடத்திற்குள் போய் பாதுகாப்புத் தேடுவோம். இரவு வேளையில் பணியாளர்கள், நோயாளர்கள், விடுதியில் தங்கியிருந்தவர்கள் என எல்லோரும் அக்கட்டடத்தின் நடைபாதையில் *(corridor)* தான் படுப்போம்.

இராணுவத்தாக்குதலில் காயமடைந்து பல பகுதிகளில் இருந்தும் கொண்டுவரப்பட்ட பொதுமக்களால் வைத்தியசாலை நிரம்பியிருந்தது. நோயாளர் விடுதிக்குச் சென்று காயமடைந்து வரும் பொதுமக்களைப் பார்க்கும்போது மிகவும் அச்சமாக இருந்தது.பலர் கால்இழந்து கையிழந்து கொண்டுவரப்பட்டார்கள், சதைத்துண்டங்களாக வந்தவர்களைப் பார்க்கும்போது அச்சமாக இருந்தது. அப்பாவுக்கு நிற்க நேரமில்லை. நோயாளர் காவுவண்டியில் காயக்காரரை ஏற்றுவதும் இறக்குவதுமாக ஓடிக்கொண்டிருந்தார். வெளியே சென்ற அப்பா திரும்பிவரும் வரை வாசலில்நின்று வந்திட்டாரா! என பல தடவைகள் காத்திருப்போம்.

தீபாவளித் தினமான அன்று கடுமையான எறிகணைத்தாக்குதல்களையும் விமானத்தாக்குதல்களையும் நடத்திக்கொண்டு முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டது இந்திய இராணுவம். எல்லோரும் வழமைபோல் கட்டடப் பகுதிக்குள் சென்று பாதுகாப்புத் தேடினோம். எறிகணைத் தாக்குதல் குறைவாக இருக்கும் சமயங்களில் அம்மா ஓடிச்சென்று சமைத்தார். 11.30 மணியளவில் வெளிநோயாளர் பிரிவு இயங்கும் பகுதியில் செல்விழுந்து வெடித்தது. மத்தியானம் ஒரு ஓய்வு நேரம் பார்த்து அப்பா எங்களுக்கு சாப்பாட்டைக் குழைத்து உருண்டைகளாக்கித் தர, அக்கட்டடத்தின் ஓரத்தில் நின்று சாப்பிட்டோம் அவருடைய கையால் நாங்கள் சாப்பிடும் கடைசிச் சாப்பாடு என்பதை அறியாமால், எங்களுக்கு குழைத்துத் தந்து விட்டு, அப்பா தானும் சாப்பிட்டார். மீண்டும் எறிகணைத் தாக்குதல் அதிகமாக, உணவை முடித்த உடனேயே நாங்கள் கட்டிடங்களுக்குள் சென்றுவிட்டோம்.

சிறிது நேரத்தின்பின் ஒரு எறிகணை எட்டாம் இலக்க நோயாளர் விடுதியின் மீது வீழ்ந்து சிதறியதால் அங்கிருந்த நோயாளிகள் ஏழு பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். இதனால், அலுவலகக் கட்டடப் பகுதிக்கு அருகிலிருந்த நோயாளர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களையும் அக்கட்டிடத்திற்குள் கொண்டு வந்து சேர்த்தார்கள். எழுந்து நடக்க முடியாதவர்களை தள்ளுவண்டிகளிலும் தோள்களிலும் சுமந்து கொண்டுவந்து மெத்தைகளை நிலத்தில் போட்டு படுக்க வைத்தனர். அதில் சிலர் சேலைன் மருந்து ஏற்றியபடியே கொண்டுவந்து விடப்பட்டனர். இதனால் அவ்விடம் நோயாளர்கள், வைத்தியர்கள், பணியாளர்களினால் நிரம்பியிருந்தது.

பிரதான அலுவலகத்திற்குப் பக்கத்தில் இருக்கும் வெளிவாசலுக்கு நேரே நின்று பார்த்தால் யாழ் மணிக்கூட்டுக் கோபுரப்பகுதி தெரியும். அந்த வாசல் வழியாகத்தான் நோயாளர்களை வைத்தியசாலைக்குள் கொண்டு வருவார்கள். இடையிடையே வாசலுக்குச் சென்று வெளியில் என்னநடக்கின்றது எனபார்த்துக்கொண்டிருந்தேன். மாலை மூன்று மணியளவில், அலுவலகத்திற்கு நேரே இருக்கும் பிரதான வாசலில், வெள்ளைக் கொடியுடன் வந்த வாகனம் ஒன்று பிரதான வீதியிலிருந்து வைத்தியசாலைக்குள் வருவதற்கு திரும்பியபோது, மணிக்கூட்டுக் கோபுரத்தடிக்கு முன்னேறி வந்;திருந்த அமைதிப்படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகியது. அதிலிருந்து சாரதி மட்டும் வைத்தியசாலைக்குள் ஓடிவந்தார். காயக் காரர்களுடன் சேர்த்து வாகனம் தீப்பிடித்து எரிந்தது. தப்பி வந்த சாரதி 'நான் குருநகரில் இருந்து காயக்காரரை ஏத்திக் கொண்டு வந்தனான். உள்ளுக்குள்ள கொண்டு வரமுன்னம் இப்பிடி நடந்து போச்சுதே' என்று கதறிக் கொண்டிருந்தார். 'அங்க சனமெல்லாம் வீதியிலையும் வீடுகளிலையும் காயப்பட்டும் செத்தும் போய் கிடக்குதுகள் அவங்களை ஏத்திக் கொண்டுவர ஒண்டுமில்லை, ஆக்களுமில்லை. இவங்களாவது பிழைக்கட்டும் எண்டு ஏத்திக் கொண்டு வந்தன். கடைசியில வாசல்ல வைச்சே அவங்களையும் கொன்றுபோட்டாங்களே..... அங்க தெருவெல்லாம் பிணமாத்தான் கிடக்குது' என்றார். இதைக் கேட்டபோது உடல் ஒருகணம் நடுங்கியது.

கிட்டத்தட்ட நான்கு மணியளவில் திடீரென துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் மிக அண்மையில் கேட்கத் தொடங்கியது. வைத்தியசாலை வளாகத்திற்குள் நுழைந்த இராணுவம் நாம் இருந்த பகுதியை நோக்கிச் சுட்டுக்கொண்டு வந்தது. எல்லோரும் சத்தமிட்டவாறே ஆளுக்காள் தள்ளுப்பட்டுக் கொண்டு ஓடினார்கள், நோயாளர்கள் செய்வதறியாது கத்தினார்கள். தம்பிக்கு பக்கமாக இருந்த சுவரில் துப்பாக்கிவேட்டு ஒன்று பட்டுத் தெறித்தது. இராணுவம் வைத்தியசாலைக்குள் வந்தால் அவர்களுடன் பேசலாம் என நம்பிக்கையுடன், வைத்தியசாலைச் சீருடையணிந்து முன்னுக்கு நின்ற பணியாளர்கள் பிணங்களாகச் சரிந்து கொண்டிருந்தார்கள். தம்பியை இழுத்துக் கொண்டு வந்த அம்மா என்னை கதிரியக்கப் பகுதிக்கு எதிர்ப்பக்கம் தள்ளிவிட்டார். நானும் நண்பனும் ஒரு அறைக்குள் செல்ல, பின்னுக்கு வந்த அம்மாவும் தம்பியும் அறைக்குள் நுழைய முயற்சித்தனர் அது முடியாமல் போக எதிர்ப்பக்கமாக இருந்த அறைக்குள் செல்ல எத்தனித்தார், அதுவும் முடியவில்லை. உடனே அந்தக் கொறிடோரில் விழுந்து படுத்து விட்டனர். அதேசமயம் அந்த இடத்தில் வீழ்ந்து வெடித்த கைக்குண்டில் பிரியா காயமடைந்து விழுந்தாள். தொடர்ந்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் வைத்தியசாலை வளாகத்தை அதிர வைத்துக் கொண்டிருந்தன. ஐயோ! ஐயோ! என்ற கூக்குரல்கள் முருகா! முருகா! நல்லூரானே! அம்மாளாச்சி காப்பாற்று காப்பாற்று என எல்லா குலதெய்வங்களையும் கதறி அழைத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் *"(We are civilians), (We are civilians)"* என்ற சத்தங்களும் பலமாகக் கேட்டுக் கொண்டிருந்தன.

மக்களின் கதறல்கள் எதையும்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தொடர் நில அபகரிப்புக்கு உள்ளாகும் திருகோணமலை!

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதானமான தமிழ் முஸ்லீம் பிரதேசசெயகங்களில் தீவிர நில அபகரிப்பு இடம் பெறுகின்றது.இதன் காரணமாக திருகோணமலை மாவட்டத்தின் சனத்தொகையில் சிங்களவர்கள் 27 வீதமாக காணப்படுவதுடன் 36வீதமான நிலத்தை தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.



புவியியல் ரீதியில் வடக்கு கிழக்கை இணைக்கும் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு,கடந்த பத்து வருடங்களில் மிகமோசமாக பறிபோயுள்ளது. இந்த பிரதேச செயலாளர் பிரிவில் ஆகக்குறைந்தது 41164 நிலத்தை அபகரித்துள்ளனர்.இது ஒட்டு மொத்த நிலப்பரப்பின் 50 வீதமாகும் என ஒக்லாண்ட் நிறுவனம் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்திருந்தது.



இந்த நிலையில். திருகோணமலை மாவட்டம், குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட திரியாய் பகுதியில் உள்ள தனியார் விவசாய காணி பௌத்த மதகுரு ஒருவரின் அடாவடித்தனத்துக்கு உள்ளானது.

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலின் போது தேர்தல் வாக்குறுதிகளிலும் தனது சமூக ஊடக பதிவுகளிலும் இந்த விவகாரம் தொடர்பில் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக தேசிய மக்கள் சக்தியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் அருண் ஹேமச்சந்திர கூறியிருக்கிறார்.



இது போன்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சண்முகம் குகதாசனும் வாக்குறுதிகளை தெரிவித்திருக்கிறார். இது தவிர ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகிய இம்ரான் மஹ்ரூப் மக்கள் பிரச்சினைக்கான தீர்வுக்காக குரல் கொடுப்பதாக கூறியிருக்கிறார்.

இவ்வாறாக தமிழர் தாயகமான திருகோணமலை மாவட்டத்தில் பல பிரச்சினைகள் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனை புதிதாக தெரிவாகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்த்து வைப்பார்களா என்பது கேள்விக்குறியே. தேர்தல் காலங்களில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களா என்பதை சற்று பொறுத்திருந்து பார்ப்போம்.

## ஹஸ்பர் ஏ ஹலீம்

தங்களுக்கு சொந்தமான காணிக்குள் விவசாய பெரும்போக நெற் செய்கைக்கான இயந்திரம் மூலமான உழுதுதல் நடவடிக்கையின் போது காணிக்குள் புகுந்த பௌத்த பிக்கு அட்டகாசம் ஏற்படுத்தியதாக புல்மோட்டையை சேர்ந்த ஜெ.புஹாரி தெரிவிக்கிறார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிப்பதாவது " வளத்தாமலை பகுதியில் காலம் காலமாக எங்கள் விவசாய காணியில் விவசாயம் செய்து வந்தோம். தற்போது பௌத்த பிக்குவினால் பெரும்போகச் செய்கைக்காக வயல் நிலத்தை உழவு மேற்கொள்ளும் போது தடுத்து நிறுத்தப்பட்டது. இம் முறை குத்தகைக்கு எனது சிறிய தந்தைக்கு காணியை வழங்கியிருந்தேன். இருந்த போதிலும் பௌத்த பிக்குவின் அட்டகாசம் காரணமாக காவல்துறையில் முறைப்பாடு செய்த போது அதனை மீறியும் தடையை ஏற்படுத்தி வருகிறார். இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது " என்றார்.

இது விடயமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 18.10.2024 ந் திகதி அன்று திருகோணமலை பிராந்திய நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்ததாகவும் கிழக்கு மாகாண ஆளுனர், ஜனாதிபதி செயலகம் போன்றவற்றுக்கான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டும் நிரந்தர தீர்வு இன்று வரைக்கும் (2024.11.16) கிடைக்கவில்லை என காணிக்கு சொந்தமான புஹாரி என்பவர் மேலும் தெரிவித்தார்.

இது தவிர அதனை அண்டிய பொன்மலைக்குடா பகுதியில் முஸ்லிம்களுக்குரிய ஜனாசா அடக்கம் செய்யும் மையவாடிக்குள் ஜனாசாவை அடக்க விடாது புனித பூமி என்ற போர்வையில் அரிசிமலை பௌத்த பிக்குவின் அடாவடி 12.10.2024 அன்றைய நாள் இடம் பெற்றது காவல்துறையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் மீண்டும் ஜனாசா நல்லடக்கம் செய்யப்பட்டது. அநுர குமார ஆட்சியில் கூட முஸ்லிம் மக்களுடைய மத சுதந்திரம் பறிக்கப்படுவதை இதன் மூலமாக காணலாம்.

இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை ஆசனத்தை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கு மக்கள் பிரதிநிதிகளில் பல புதிய முகங்களை பெற்றுள்ளனர்.

இந்த புதியவர்கள், திருகோணமலை உள்ளிட்ட தமிழர் பிரதேசத்தில் காணப்படும் நில அபகரிப்பு தொடர்பில் கரிசனை காட்ட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

தேர்தல் காலங்களில் பல மக்கள் சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தில் தெரி வாகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்குறுதிகளை அள்ளி வீசியுள்ளார்கள்.

தமிழ் மக்களிடத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண் டும் என இலங்கை தமிழ் அரசு கட்சி சார்பில் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகிய ச.குகதாசன் கூறியிருந்தார். எனவே மக்கள் பிரச்சினைகளை பாராளு மன்றத்திலும் வெளியிலும் பேசி நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

புனித பூமி என்ற போர்வையில் விவசாய காணிகளை தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தம் என பல ஏக்கர்களை அடாத்தாக அபகரிப்புச் செய்யும் அரிசி மலை திரியாய் குறித்த பௌத்த பிக்குவான பாணமுரே திலகவன்ச தேரர் கடந்த கோத்தபாயவின் ஆட்சி காலத்தில் ஜனாதிபதியின் கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியின் உறுப்பினராக செயற்பட்டு வந்தவர் மட்டுமல்லாது வடகிழக்கு பௌத்த சங்கத்தின் தலைவர் எனவும் தெரிய வருகிறது.



அரசாங்கத்தினால் இவருக்கு மெய்ப்பாது காவலரும் (MSD) வழங்கப்பட்டுள்ளது . ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆட்சியின் பின் அதிரடியாக முன்னால் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு நீக்கப்பட்ட போதும் இவ்வாறு பௌத்த பிக்குவுக்கு மாத்திரம் ஏன் பாதுகாப்பு வழங்கப்படுகிறது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

திரியாய்க் கிராமத்தின் பூர்வீக வயல் நிலங்களில் முக்கிய வயல் வெளிகளான வளத்தாமரை ,ஆதிக்காடு, ஒட்டுப்புல்மோட்டை, நீராவிக்கண்டல் ,வேடன்குளம் உள்ளடக்கிய வயல் நிலங்களில் மக்கள் பரம்பரை பரம்பரையாக வயற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் புல்மோட்டை அரிசி மலைப் பிக்குவினால் அடாவடியாக 88 ஏக்கர் பொதுமக்களின் உறுதிக் காணிகள் கையகப் படுத்தப்பட்டுள்ளன.

"இந்த விவசாய காணிகள் எங்களுடைய சொந்த பூமி. இதற்குள் விவசாயம் செய்ய முடியாது தடுத்து நிறுத்தும் பௌத்த பிக்குவினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. உடனடியாக தீர்வினை பெற்றுதாருங்கள்" என திரியாய் விவசாய சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்தார்.

மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்படும் என கூறப்பட்ட தேர்தல் கால வாக்குறுதிகள் நிறைவேறுமா என்ற சந்தேகம்இவ்வாறு நில அபகரிப்பால் பாதிக்கப்படும் மக்களுக்கு இருக்கின்றது.

• • •

# திருக்கோணமலை மாவட்டத்தில் வரலாற்றில் முதல் தடவையாக தேசியக் கட்சி ஒன்றின் மூலமாக ஒரு தமிழர் நாடாளுமன்றம் செல்கின்றார்.

சமஸ்டிக் கட்சி என்றழைக்கப்படுகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியானது 1949 டிசம்பர் 19 ஆம் நாள் தந்தை செல்வா என எல்லோராலும் அழைக்கப்படுகின்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களால் தொடங்கப்பட்டது.



இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்ட பின்னர் முதலாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை 1952 இல் சந்தித்தது. அத்தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்குக் கிழக்கிலே இரண்டு(02) உறுப்பினர்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. அதில் ஒன்று திருக்கோணமலை மாவட்டத்தில் அப்போது இருந்து இரண்டு தொகுதிகளில் ஒன்றான திருக்கோணமலைத் தொகுதியில் நவரெட்ணசிங்கம் இரட்ணவரோதயம் இராஜவரோதயம் அவர்கள் 4550 வாக்குகள் பெற்று முதலாவது நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

திருக்கோணமலை மாவட்டத்தில் 1952 தொடக்கம் 2020 நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் வரை தேசியக் கட்சிகளின் மூலமாக எந்தவொரு தமிழர்களும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியிருக்கவில்லை.

ஆனால் 2024.11.14 ஆம் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் மூலமாக திரு.அருண் ஹேமச் சந்திரா அவர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளார். திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றம் செல்கின்ற முதலாவது தமிழர் என்ற பெருமை அருண் மேச்சந்திரா அவர்களுக்குச் சாரும்.

அத்துடன் திருக்கோணமலைத் தொகுதி இவ்வாண்டுதான் முதன்முதலாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கைகளில் இருந்த பறிபோயிருக்கின்றது. இம்முறை தேசிய மக்கள் சக்தி திருக்கோணமலைத் தொகுதியை வென்று வரலாற்றுச் சாதனையைப் படைத்திருக்கின்றது.

**நடந்து முடிந்த தேர்தலிலே முக்கிய கட்சிகள் பெற்ற வாக்குகள்:**

1.தேசிய மக்கள் சக்தி 87031 வாக்குகளைப் பெற்று 02 உறுப்பினர்களையும்
2.ஐக்கிய மக்கள் சக்தி 53058 வாக்குகளைப் பெற்று 01 உறுப்பினரையும்
3.இலங்கைத் தமிழரசுக் கட்சி 34168 வாக்குகளைப்பெற்று 01 உறுப்பினரையும் பெற்றுக்கொண்டுள்ளன.

இதனைவிட
1.புதிய ஜனநாயக முன்னணி 9387 வாக்குகளையும்
2.ஜனநாயக தேசிய கூட்டமைப்பு 4868 வாக்குகளையும்
3.ஜனநாயக இடதுசாரி முன்னணி 1925 வாக்குகளையும்
4.அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 1542 வாக்குகளையும்
5.ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 1216 வாக்குகளையும்
6.தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 824 வாக்குகளையும் பெற்றிருக்கின்றன.

**திருக்கோணமலை மாவட்ட வாக்குகளும் வாக்களிப்பும்:**

## கதிர்.திருச்செல்வம்
தம்பலகமம்

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள 315925 வாக்குகளில் 218425 வாக்குகள் அளிக்கப்பட்டன.

இது மாவட்ட மொத்த வாக்கின் 69.14 வீதமாகும். இதில் 13537 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

ஒப்பீட்டளவில் சிங்கள மக்களின் வாக்களிப்பானது இத்தேர்தலில் குறைவாகவே காணப்பட்டது. சிங்கள மக்களின் வாக்குகளில் அதிகளவான வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கே வழங்கப்பட்டிருந்தன.

தேசிய மக்கள் சக்தி பெற்ற வாக்குகள் 87031 ஆகும். இவ்வாக்குகளில் சிங்கள மக்களின் 45000 வாக்குகளும் முஸ்லிம் மக்களின் 27000 வாக்குகளும் தமிழ் மக்களின் வாக்குகளில் 15000 வாக்குகளும் அடங்கும்.

திருக்கோணமலை மாவட்டத்தில் மூன்று இன மக்களும் ஒரே கட்சிக்கு பெருந்தொகையான வாக்குகளை வழங்கியிருப்பது இதுதான் முதல் தடவையுமாகும்.

தேசிய மக்கள் சக்தி 5222 வாக்குகள் அதிகமாகப் பெற்றிருந்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு கிடைக்கப்பெற்ற உறுப்பினர் கிடைக்காது போயிருக்கும். மயிரிழையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது உறுப்பினரைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது எனலாம்.

**தொகுதி அடிப்படையில் கட்சிகள் பெற்ற வாக்குகள்:**

| கட்சிகள் | திருக்கோணமலை | மூதூர் | சேருவில | தபால் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தே.ம.சக்தி | 25479 | 24145 | 27702 | 9705 | 87031 |
| ஐ.ம.சக்தி | 11191 | 29433 | 9581 | 2853 | 53058 |
| இ.த.அ.கட்சி | 18461 | 8415 | 5543 | 1749 | 34168 |

**திருக்கோணமலை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றம் செல்லும் உறுப்பினர்கள்:**



தேசிய மக்கள் சக்தியிலிருந்து திரு அருண் ஹேமச் சந்திரா (38368) அவர்களும்
திரு றொசான்(25814) அவர்களும்
ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து திரு இம்ராம் மஹறூப்(22729) அவர்களும்
இலங்கைத் தமிழரசுக் கட்சியிலிருந்து திரு ச.குகதாசன்(18470) அவர்களும்
நாடாளுமன்றத்திற்கு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

| ஆண்டு | தேர்தல் முடிவு |
|---|---|
| 2004 | 68955 |
| 2010 | 33268 |
| 2015 | 45894 |
| 2020 | 39570 |
| 2024 | 34168 |

**திருக்கோணமலை மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வாக்குச் சரிவு:**

திருக்கோணமலை மாவட்டத்தில் 97867 தமிழ் வாக்காளர்களும் 131811 முஸ்லிம் வாக்காளர்களும் 84253 சிங்கள வாக்காளர்களும் 1163 ஏனைய வாக்காளர்களும் உள்ளனர்.



97867 தமிழ் வாக்காளர்களில் 34168 வாக்குகளை மாத்திரமே இலங்கத் தமிழரசுக் கட்சியினால் பெறக்கூடியதாக இருந்திருக்கின்றது. இது தமிழர்களின் மொத்த வாக்குகளில் அண்ணளவாக 35 வீதமானதாகும்.

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் இரண்டு உறுப்பினர்களை இலங்கைத் தமிரசுக்கட்சி பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தல்களில் எல்லாம் ஒரு உறுப்பினரையே இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் பெறக் கூடியதாக இருந்ததுடன் கட்சி பெற்றுக் கொண்ட வாக்குகளில் தொடர்ந்து சரிவையே சந்தித்து வந்தது.

**திருக்கோணமலை மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல் பெறுபெறுகள்**

இறுதி யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் கட்சிக்கான அங்கீகாரத்தினை மக்கள் வழங்கியிருந்தாலும் கட்சியின் செயற்பாடுகள் நல்ல முறையில் இல்லாமையினால் தமிழ் மக்கள் கட்சியில் வெறுப்படையத் தொடங்கியதுடன் தமது ஆதரவினை மெதுமெதுவாக விலக்கிக் கொள்ளத் தீர்மானித்து விட்டனர் என்பதனையே தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன.

கட்சியின் செயற்பாடுகள் ஊரக மட்டம் தொடக்கம் மாவட்டம் வரை திறமான வகையில் கட்டமைக்கப்பட்டு மக்கள் நேயச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லையெனில் அடுத்து வருகின்ற தேர்தல்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பாரிய பின்னடைவுகளைச் சந்தித்து தோல்விகளையே தழுவும் என்பதில் ஐயமில்லை.

• • •

# சிறப்புரிமை மீறல்

துரைசாமி நடராஜா

மலையக மக்கள் இந்நாட்டில் ஒரு தனித்துவமான சமூகமாக விளங்குகின்றனர். எனினும் இம்மக்களின் வாழ்வியல் நிலைமைகள் குறித்து திருப்திகொள்ள முடியாத ஒரு நிலையே காணப்படுகின்றது. இம்மக்கள் பல்வேறு நெருக்கீடுகளுக்கும் உரிமை மீறல்களுக்கும் உள்ளாகி வருகின்ற நிலையில் இம்மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் இன்னும் அதிகமுள்ளன. கடந்த காலத்தில் இவற்றுக்கான தீர்வு தொடர்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் புஷ்வாணமாகியதையே அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இந்நிலையில் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் ஆட்சியிலேனும் மலையக மக்கள் உள்ளிட்ட நாட்டு மக்கள் பல்வேறு நன்மைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கி காணப்படுகின்றது.

சமகாலத்தில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சர்வதேச ஏற்பாடுகளாக ஐக்கிய நாடுகள் சாசனங்கள், உடன்பாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சாசனங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் காணப்படுகின்றன. ஆனாலும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிய கரிசனைகளும் மற்றும் பொறுப்பு கூறப்படாத நிலைமைகளும் நீடித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கான அடிப்படையான காரணமாக இருப்பது அனைத்து தரப்பினரும் சித்தாந்தங்களை கொண்டிருக்கின்றார்கள். நடைமுறையில் அவற்றின் இலக்குகள் அடையப்படாத நிலைமையே யதார்த்தமாக உள்ளது. நாடுகள் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றிய சித்தாந்தங்களைக் கொண்டிருந்தாலும் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உத்தரவாதத்தில் தேசியவாதம் மற்றும் தேசிய தாராண்மைவாதம் ஆகிய இரு விடயங்கள் விவாதத்துக்கு உள்ளவையாக தொடர்ந்துமுள்ளன. சிறுபான்மையினரை அச்சுறுத்துவதானது அவர்களின் சிறப்புரிமைகளை மீறும் நியாயமற்ற செயற்பாடாகும். அது தனிநபர்களை, சிறு குழுக்களை பாகுபாட்டுக்கு உள்ளாக்கும் செயற்பாடாகும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் கிராஸ் பல்கலைக்கழகத்தின் சட்டபீடத் தலைவர் கலாநிதி ஜோசப் மார்க்கோ.

### திட்டமிட்ட வன்செயல்கள்

இந்த வகையில் இலங்கையில் சிறுபான்மையினர் என்ற வகையில் மலையகம் எதிர்கொள்ளும் நெருக்கீடுகள் மற்றும் சவால்கள் தொடர்ச்சியாகவே இருந்து வருகின்றன. நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னராயினும் சரி அல்லது சுதந்திரம் பெற்ற பின்னராயினும் சரி இம்மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கீடுகளுக்கு ஒருபோதும் குறைவிருக்கவில்லை. 1928 ம் ஆண்டு இந்திய தொழிலாளர்களுக்கும் பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை பற்றிய பிரச்சினை பெரும் வாத பிரதி வாதங்களை பாராளுமன்றத்தில் ஏற்படுத்தி இருந்தது. 1948 ம் ஆண்டில் இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை மற்றும் பிரசாவுரிமை என்பன ஐக்கிய தேசியக் கட்சியினால் பறிக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட தழும்புகள் இன்று வரையும் நின்று நிலைக்கின்றது. 1956 ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட தனிச்சிங்கள சட்டம், நாட்டில் அவ்வப்போது இம்மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள் எனப்பலவும் இம்மக்களின் உரிமைகளை கேள்விக் குறியாக்கியதோடு இந்நாட்டில் இந்திய வம்சாவளி மக்கள் அச்சத்துடன் வாழும் சூழ்நிலையையும் அதிகப்படுத்தியது என்றால் மிகையாகாது.

மேலும் ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைகள் என்பனவும் இம்மக்கள் இடம்பெயர்வதற்கு வழிவகுத்ததோடு இதனால் இம்மக்கள் வலுவற்ற சமூகமாக பின்தள்ளப்படுவதற்கும் ஏதுவானது. இந்நிலையில் சமூகத்தின் இருப்பு மற்றும் அடையாளம் என்பவற்றை தக்கவைத்துக்கொள்ள இம்மக்கள் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

இலங்கை நாடானது அதன் 75 சதவீத மக்களான சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமான நாடு. ஏனைய சிறுபான்மையினர் அவர்களுடன் வாழத் தெரிந்துகொள்ள வேண்டும். சிறுபான்மையினர் இந்த நாட்டில் எங்களுடன் வாழலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மையினரின் உரிமைகள் என்ற அடிப்படையில் சாத்தியமற்றதான எவற்றையும் கோரிக்கையாக முன்வைக்க முடியாது என்ற இனவாதிகளின் கருத்துக்களும் மலையக மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் உரிமைகளை மழுங்கடிப்பிற்கு உள்ளாக்கி இருந்தன.



மலையக மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்கள் பலவற்றுக்கும் சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். அம்மக்களின் கல்வி, பொருளாதாரம், தொழில்வாய்ப்பு, குடியிருப்பு என்று பல உரிமைகளும் மீறப்பட்டு வருவதாக பொதுவான குற்றச்சாட்டு இருந்து வருவதும் தெரிந்ததேயாகும். இதில் உண்மை இல்லாமலும் இல்லை. இவற்றுள் பிரதானமாக இம்மக்களின் தொழில் உரிமைகள் மீறப்பட்டு வரும் நிலையில் உழைப்பிற்கேற்ற ஊதியம் என்பது இன்னும் கனவாகவே இருந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். 'சாண் ஏறினால் முழம் சறுக்கும்' ஒரு போக்கினையே சம்பள அதிகரிப்பு விடயத்தில் அவதானிக்க முடிகின்றது.

### கொடுமையிலும் கொடுமை

ஜனவசம, அரச பெருந்தோட்ட யாக்கம், எல்கடுவ பிளான்டேசன் கம்பனி ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 7000 தொடக்கம் 10,000 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சட்டரீதியான கொடுப்பனவுகளான ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் சேவைக்கால பணம் எனப் பல மில்லியன் ரூபாய்கள் வழங்கப்படாமை ஒரு பெரும் பிரச்சினையாக உள்ளதாக கடந்த கால தகவல்கள் வலியுறுத்தி இருந்தன. மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். எனினும் இன்று வரையும்இவற்றுக்கானநியாயமானபரிகாரங்கள் அல்லது தீர்வுகள் எடுக்கப்படவில்லை. கண்டி மற்றும் மாத்தளை மாவட்ட ஜனவசம, அரச பெருந்தோட்ட யாக்கம், எல்கடுவ பிளான்டேசன் கம்பனி தோட்டங்களைச் சேர்ந்த சுமார் 7000 தொடக்கம் 10,000 தொழிலாளர்களுக்கு இத்தகைய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இவர்களுக்கு மொத்தமாக சுமார் 1800 மில்லியன்கள் வழங்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் வலியுறுத்துகின்றன. உழைத்துக் களைத்த தொழிலாளர்கள் இறுதிக்காலத்தில் உரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள பல படிகளை ஏறி இறங்க வேண்டியுள்ளது. சிலவேளை அவர்கள் உரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியாது மரணத்திற்குள்ளான நிகழ்வுகளும் மலையகத்தில் இடம்பெற்றுள்ளமை கொடுமையிலும் கொடுமையாகும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்பு பிரச்சினைகளை நிவர்த்தி செய்து தனிவீட்டுக் கலாசாரத்தை முன்னெடுக்கப் போவதாக தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் வரவு செலவு திட்ட முன்மொழிவுகளிலும் கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை ஆட்சியாளர்கள் வழங்கி இருந்தார்கள். குறிப்பாக 2014 ம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட முன்மொழிவில் பெருந்தோட்டத் துறையிலுள்ள தரம் குறைந்த வீடுகளை மாற்றீடு செய்வதற்காக 50,000 அலகுகளைக் கொண்ட வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிக்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வீடுகளின் நிர்மாணம், துப்புரவேற்பாடு மற்றும் ஏனைய வசதிகளுடன் தேவையான பொறியியல் மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்படும். நகர வீடமைப்பு தொகுதிகள் மற்றும் தோட்டத்துறை வீடமைப்புக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிப்பதற்காக 750 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் நீண்ட கால சர்வதேச முறியினை அரசாங்க உத்தரவாதமொன்றின் மூலம் விநியோகிப்பதற்கும், பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களுக்குத் தேவையான மறுதரப்பு நிதியேற்பாடாக அரசாங்கத்திற்கு மேலும் 750 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரையும் விநியோகிப்பது தொடர்பிலும் முன்மொழிவில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இதுபோன்றே இலங்கையின் கடந்தகால வரவு செலவு திட்டங்கள் பலவும் கல்வி, வீடமைப்பு, இளைஞர் அபிவிருத்தி எனப்பல விடயங்கள் தொடர்பிலும் முன்மொழிவுகளை முன்வைத்திருந்தன. எனினும் இவையனைத்தும் ஏட்டளவில் முற்றுப்பெற்றதே தவிர செயல் வடிவம் என்பது காணப்படவில்லை.

### வாக்குறுதிகள் மட்டும்

இதைப்போன்றே தொழிலாளர்களின் தினமாகிய மேதினத்தில் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் உள்ளிட்ட மேலும் பல விடயங்களை வலியுறுத்தி அரசியல் கட்சிகளும் ஆட்சியாளர்களும் பல்வேறு வாக்குறுதிகளை வழங்குகின்றனர். இவர்களுடன் மலையக அரசியல்வாதிகளும் இணைந்து கொண்டு இவர்களும் தொழிலாளர்களுக்கு நலமளிக்கக் கூடிய வாக்குறுதிகள் பலவற்றையும் அள்ளி வழங்குகின்றனர். ஆயினும் இவையனைத்தும் கானல் நீராகியுள்ள நிலையில் இம்முறை மேதினத்தில் வழங்கப்படும் வாக்குறுதிகள் அடுத்துவரும் மேதினத்திலேயே தூசுதட்டிப் பார்க்கப்படுவதே பெரும்பாலும் வழமையாக உள்ளது.

இதேவேளை மலையக மக்களை தொடர்ந்தும் மலையக தமிழர்களாகவோ அல்லது தோட்டப்புற மக்களாகவோ வாழ

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# காற்றோடு காற்றாகக் கரைந்து போனவர்கள்...

ஒரு காலத்தில் மறத் தமிழர்களாகவும் அறத் தமிழர்களாகவும் இருந்தவர்கள்தான் நாம். இன்று, 360 டிகிரி கோணத்தில் பார்க்கிறபோது, எட்டுத் திக்குகளிலும் 'வாட்ஸ் ஆப் தமிழர்கள்' மட்டுமே நிரம்பி வழிவதை அவதானிக்க முடிகிறது. எங்கும் நான், எதிலும் நான் – என்கிற சுய விளம்பர வெறி தலைவிரித்தாடுகிறது. இது, தன்னலத்தோடு தன்னைத்தானே முன்னிறுத்திக் கொள்தல்.

தன்னைத்தானே முன்னிறுத்திக் கொள்கிற தன்மை, பிரபாகரனின் தோழர்களிடமும் இருந்ததென்று சொன்னால் வியப்படைவீர்கள். அப்படி தம்மைத் தாமே அவர்கள் முன்னிறுத்திக் கொண்ட ஒவ்வொரு சம்பவமும் காலப் போக்கில் சரித்திரமாகவே ஆகிவிட்டது. கார ணம், அவர்களுக்கு இருந்தது சுய விளம்பர வெறியல்ல.... சுய அர்ப்பணிப்பு நெறி.

எண்பதுகளின் இடைப்பகுதியில், நெல்லியடியில் காலூன்றியிருந்தது சிங்கள ராணுவம். சுற்றியிருந்த அத்தனைக் கிராமத்துக்கும், நெல்லியடி ராணுவ முகாம் சிம்ம சொப்பனம். நெல்லியடியின் பிரதான பள்ளி வளாகமே ராணுவ முகாமாக மாற்றப்பட்டிருந்த நிலையில், இரும்புக் கோட்டையைப்போல், அதற்கு பல அடுக்குப் பாதுகாப்பு.

நெல்லியடி முகாமிலிருந்து ராணுவ அணி ஒன்று வெளியே வருகிறது என்று கேள்விப்படுகிற கணத்திலேயே சுற்றியிருக்கிற கிராமங்களைப் பதற்றம் தொற்றிக் கொள்ளும். கண்ணில் படுகிற இளைஞர்களெல்லாம் 'ஆமி'க்கு புலியாகத்தான் தெரிவார்கள். அந்த இளைஞர்களை அடித்து உதைத்து நசுக்கிவிட்டுத்தான் நகர்வார்கள். இளம்பெண்கள் நிலை அதைக்காட்டிலும் பல மடங்கு மோசம். தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை அவர்கள் வெளியே சொல்லக்கூட முடியாது.

தங்கள் தாய்மண்ணில் இப்படியொரு அவமானச் சின்னம் இருப்பதை, விடுதலைப் புலிகளால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அதை அப்புறப்படுத்த என்ன செய்யலாமென்கிற உணர்வுபூர்வமான ஆலோசனைகள் தொடர்ந்துகொண்டிருந்தன. கடைசியில், நெல்லியடி முகாமைச் சொல்லியடிப்பதென்கிற முடிவு எட்டப்பட்டு, அதைத் தகர்ப்பதற்கான நாள் குறிக்கப்பட்டபோது, அந்தப் பணியை ஏற்பதில் விடுதலை வீரர்களுக்குள் பெரும் போட்டி நிலவியது.



அது ஒரு தற்கொலைப் படைத் தாக்குதல். மிகையான வெடிபொருட்களுடன் கூடிய வாகனத்தை ஓட்டிச் சென்று முகாமின் மீது மோதித் தகர்க்கிற மாவீரன், முகாமோடு முகாமாகச் சேர்ந்து சிதறிவிடுவான். அது, விடுதலைப் புலிகள் அதுவரை கையாளாத தாக்குதல் உத்தி. மரணம் நிச்சயமென்பது தெரிந்தும், அந்தப் பணியை ஏற்கப் போட்டி போட்டனர் இளம் போராளிகள். இந்தப் பணியை என்னிடம் ஒப்படையுங்கள் – என்று பிடிவாதம் பிடித்தவர்களில் தியாக தீபம் திலீபனும் ஒருவன். பல்வேறு கோணங்களில் பரிசீலித்த பிறகு, அந்தப் பொறுப்பு மில்லரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தாக்குதலுக்குத் தயாரான வாகனத்தில் வெடிமருந்துகள் ஏற்றப்பட்டபோது, தானும் கூடவே இருந்து அதைக் கவனித்த மில்லரின் முகத்தில் துளிக்கூட பதற்றம் இல்லை. அவன் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தான். கூடுதலாக இன்னும் கொஞ்சம் வெடிபொருட்களை ஏற்ற முடியுமே – என்று யோசனை வேறு சொல்லிக் கொண்டிருந்தான். அதனால்தான், தனக்கான சவப் பெட்டியைத் தானே தயாரித்தவன்– என்று வரலாறு அவனைப் போற்றுகிறது.



**புகழேந்தி தங்கராஜ்**



அன்று இரவு, முன்னதாகவே திட்ட மிட்டபடி, முகாமின் காவல் கோபுரத்தில் கண்காணிப்புப் பணியில் இருந்த சிங்களச் சிப்பாயை பெண் புலி சுஜி குறிதவறாமல் சுட்டு வீழ்த்திய அடுத்த நொடி, மில்லரின் இறுதிப் பயணம் தொடங்கியது. முகாமுக்குச் செல்லும் சாலையில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகத் தடைகளை நீக்கும்பணியைவெற்றிகரமாகமுடித்தபிரபுஎன்கிற விடுதலைப் புலி, வேகமாக நகரத் தொடங்கிய மில்லரின் ஜீப்பில் தானும் ஏறிக்கொள்ள, 'இது எனக்கான பணி... நீ வரவேண்டாம்' என்று அவனை வலுக்கட்டாயமாகக் கீழே இறக்கினான் மில்லர். தன்னுயிரைத் துச்சமாக மதித்து அந்த நடவடிக் கையை மேற்கொண்ட இறுதி நொடியில் கூட, தன் உயிரைக் காட்டிலும் தோழனின் உயிர் முக்கியமானதென்று நினைத்தான் அந்த மாவீரன். தன்னை மட்டுமே முன்னிறுத்தி, நெல்லியடி முகாமைத் தரைமட்டமாக்கிய மாவீரன் மில்லர், என்றைக்கு எந்த நொடியில் தங்கள் மரணம் நிகழும் என்பதை அறிந்தே, தாய் மண்ணின் விடுதலைக்காகத் தம்முயிரைத் தத்தம் செய்த கரும்புலிகளில், முதல்வன். சொந்தச் சகோதரர்களின் உயிரைக் காக்கவும், சொந்தச் சகோதரிகளின் மானம் காக்கவும், தன்னைத் தானே முன்னிறுத்திக் கொண்டவன். அவன், தனக்குத் தானே கட் அவுட் வைத்துக் கொள்ளவில்லை. தனக்குத் தானே கல்லறை கட்டிக் கொண்டான். தனக்குத்தானே வெடி வைத்துக் கொண்டான். அது தற்கொலை அல்ல.... தற்கொடை! அதனால்தான் 'தற்கொலைப் படைத் தாக்குதல்' என்று குறிப்பிடாமல், கரும் புலித் தாக்குதல் என்று, தன்மானத் தமிழில் குறிப்பிட்டார்கள், புலிகள்.

மில்லரைப் பேசும்போது, அங்கயற் கண்ணியைக் குறித்துப் பேசாதிருக்க முடியாது. மில்லருக்கும் அங்கயற்கண்ணிக்கும் நிறைய ஒற்றுமைகள்! அவளுக்கான இலக்கும் SOFT TARGET கிடையாது. அவளது இலக்கு, இலங்கை கடற்படையின் வடபிராந்திய கட்டளைக் கப்பலான 'அபித'. அது, தமிழீழ மீனவர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. ஆறாயிரம் டன் எடை கொண்ட அபித, நவீன ஆயுதங்களோடும் சகல பாதுகாப்போடும், காங்கேசன் துறை கடல் தளத்தில் நின்றுகொண்டிருந்தது. தனி ஒருத்தியாக அதைத் தாக்கிச் சுக்குநூறாக்கியவள், எங்கள் கயல்.

அந்த ஆறாயிரம் டன் கடல் அரக்கனை வீழ்த்திய கயலின் எடை வெறும் 50 கிலோ. ஆனால், அவளது மன வலிமை, ஆறாயிரம் டன்களுக்கும் கூடுதலாக இருந்தது. 325 அடி நீளம் இருந்தது அந்த எஃகு மிருகம். கயலின் உயரம் சுமார் ஐந்தடி தான்! மனோதிடம்தான் மற்றெல்லாவற்றையும் காட்டிலும் வலுவான ஆயுதம் என்பதை ஒட்டுமொத்த உலகுக்கும் நிரூபித்தாள், ஈழத்தின் வேலுநாச்சியாய் ஒளிர்ந்த அங்கயற்கண்ணி.



கரும்புலியாகத் தன்னை முன்நிறுத்திக் கொண்ட முதல் பெண் வேங்கை, கயல். இந்த வகையில், அவள் ஈழத்தின் புதல்வி மட்டுமில்லை, முதல்வி! 1994 ஆகஸ்ட் 15ம் நாள் மாலை, காங்கேசன்துறை நோக்கி அவள் நீந்தத் தொடங்கிய போது, அவளது தோழிகளும் அவளைப் பிரிய மனமின்றி அவளுடன் சேர்ந்து நீந்தினர். இருட்டத் தொடங்குகையில், தன் தோழிகளை அவள் கண்டித்தாள். இது தனக்கான பணி என்பதைச் சுட்டிக்காட்டியவள், கண்டிப்பான குரலில், தோழிகளைத் திரும்பிப் போகச் சொன்னாள். அது, பிரபுவைத் திரும்பிப் போகச் சொன்ன மில்லரின் குரல். அந்தக் குரலுக்குக் கட்டுப்பட்டு அவளைத் தொடர்வதை நிறுத்தினார்களென்றாலும், கண்ணிலிருந்து கயல் மறைகிறவரை பார்த்துக் கொண்டேயிருந்தார்கள் தோழிகள். அதற்குப் பிறகே திரும்பி நீந்தத் தொடங்கினார்கள்.

கயல் நீந்தத் தொடங்கிய இடத்துக்குத் திரும்பிவந்த பிறகும், அவளது தோழிகள், அங்கிருந்து போய்விடவில்லை. அந்தக் கடற்கரையிலேயே காத்திருந்தனர். கயலைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். நள்ளிரவு நெருங்க நெருங்க அவர்களின் உரையாடல் நின்றுவிட்டது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# எண்ணெய் வர்த்தகத்தை முன்னெடுக்கவே கொப்29 மாநாடு

**கொப்29 மாநாட்டை நடத்துபவர்கள் என்ற தோரணையில், எவ்வாறு 'படிம எரிபொருள்' தொடர்பான புதிய ஒப்பந்தங்களை ஒப்பமிடுவதற்கு, ஐக்கிய நாடுகளின் வருடாந்த காலநிலை மாநாடான கொப் 29 மாநாட்டை, அஸர்பைஜான் அரசு பயன்படுத்தியது என்ற உண்மையை, ஒரு இரகசிய ஆய்வு இங்கே வெளிக்கொணர்கிறது**

## பகுதி – 1

பாக்கு (Baku) நகரத்தின் மத்திய வீதியில் அமைந்திருக்கும் வர்த்தக மையம் புத்தம் புதிய கட்டடத் தொகுதியாகக் காட்சி தருகிறது. கறுப்பு நகரம் என்று முன்னர் அழைக்கப்பட்ட அதே இடத்திலேயே, அதாவது 1840ம் ஆண்டு, பூகோள ரீதியாக எண்ணெய்த் தொழிற்துறை தொடங்கப்பட்ட அதே இடத்திலே தான் பளபளக்கின்ற இந்தப் புதிய கட்டடம் அமைந்திருக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சூழல் மாசடைதல் தொடர்பாக அந்த நாட்களில் மிகவும் அறியப்பட்ட இந்தப் பிரதேசத்தில் தற்போது, கவின்கலை மண்டபங்களும் பணிமனைத் தொகுதிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன.



கடந்த ஜனவரி மாதத்தில், நாட்டின் 'சர்வாதிகாரி' எனப் பலராலும் அழைக்கப்படுகின்ற, அஸர்பைஜான் நாட்டின் அதிபர், இல்ஹாம் அலியேவ் ஆல் இந்தக் கட்டடம் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

அதிபர் அலியேவுக்கு, மூலோபாய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாகிய, கொப் 29 இன் செயற்பாட்டு நிறுவனத்தின் அமைவிடமாக, குறிப்பிட்ட இந்தக்கட்டடம் அமைந்திருக்கிறது. ஐக்கிய நாடுகளினால் வருடாவருடம் நடத்தப்படும், காலநிலை தொடர்பான கலந்துரையாடல்களை இந்த மாதம் அங்கே நடத்துவதற்கான பொறுப்பு, இந்த நிறுவனத்துக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. காலநிலை தொடர்பான மாநாட்டை நடத்துவதற்கு அஸர்பைஜான் தெரிவு செய்யப்பட்டமை, பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது. தனது வருமானத்தின் மூன்றில் இரண்டு பகுதியை எண்ணெய் மற்றும் வாயு போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்கின்ற, ஒரு பெற்றோலிய தேசமான அஸர்பைஜானில் இந்த மாநாடு ஒழுங்குசெய்யப்பட்டது எதற்காக?

### படிம எரிபொருள்

இந்தக் கேள்விக்கு உண்மையில் பதில் தரக் கூடியவர் எல்நூர் சொல்ற்றானோவ் (Elnur Soltanov) ஆவார்.

ஒரு தளர்வான நிலையில் அவரைக் காணக்கூடியதாகவிருந்தது. தொடர்ச்சியாக சொற்பொழிவுகளை ஆற்றவேண்டிய ஒரு சூழலிலும், வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் சந்திப்புகளை தொடர்ச்சியாக நடத்த வேண்டிய நிலையிலும், தனது வாழ்க்கையிலேயே மிகவும் துரிதமாக இயங்க வேண்டிய ஒரு வருடத்திலே, நடைபெறும் இந்தச் சந்திப்பு அவருக்கு இலகுவான ஒன்றாகவே தோன்றியிருக்க வேண்டும்.




அவர் என்னைச் சந்திக்கும் போது, எண்ணெய் மற்றும் வாயு தொடர்பான முதலீடுகளைச் செய்ய விரும்பும் ஒருவரைச் சந்திப்பதாகவே எண்ணிக்கொண்டார்.




கொப்29 இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்ற ரீதியில், அந்த உச்சி மாநாட்டின் வெற்றியை உறுதிப்படுத்தும் பொறுப்பு அவருக்கு இருந்தது. மிகவும் இலாபகரமான ஆதரவுத் திட்டம் ஒன்றை இறுதிசெய்ய விரும்பிய இசி கப்பிற்றல் (EC Capitol) என்ற நிறுவனத்தைச் சந்திக்குமாறு சொல்ற்றானோவ் கேட்கப்பட்டிருந்தார்.

காணொளி இணைப்பு வாயிலாக, குளோபல் விற்னெஸ் (Global Witness) அமைப்பின் ஒரு இரகசிய விசாரணையாளரைச் (undercover investigator) சந்திக்கின்றார் என்ற விடயத்தை அவர் அறிந்திருக்கவில்லை.

ஆரம்பப் பாரம்பரிய தொடர்பாடல் நடைமுறைகளை நிறைவுசெய்த பின்னர், எண்ணெய் மற்றும் வாயு தொடர்பான விடயங்களில், பூகோள ரீதியான முதலீடுகளில் நிபுணத்துவம் பெற்றவர்களாகவும், அஸர்பைஜான் நாட்டில் எண்ணெய் மற்றும் வாயு தொடர்பான விடயங்களில் முதலீடு செய்வதில் ஆர்வமுள்ள ஒரு தரப்பாகவும், இசி கப்பிற்றல் தன்னை அறிமுகம் செய்துகொள்கிறது.

### அஸர்பைஜானில் முதலீடு செய்ய யார் தான் விரும்ப மாட்டார்கள்.

உக்ரேனில் நடைபெற்று வருகின்ற போரின் காரணமாக ரஷ்ய நாட்டிலிருந்து எண்ணெயைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஐரோப்பா இழந்ததன் காரணத்தினால், உலகின் செல்வந்த நாடுகள் சில, படிம எண்ணெயைப் பெற்றுக்கொள்வதற்காக (Baku) பாக்குவிடம் கையேந்தி நிற்கின்றன.

இனிவருகின்ற ஒரு தசாப்தத்துக்கும், ஏன் அதற்கும் மேலாக ஐரோப்பாவுக்கு எண்ணெயை விநியோகிக்கும் ஒரு நாடாக, அஸர்பைஜான் தன்னை மாற்றிக்கொள்ள முடியும். குளோபல் விற்னெஸ் நிறுவனத்தின் ஆய்வைப் பொறுத்தவரையில், எதிர்வரும் பத்து ஆண்டுகளுக்கு, மூன்றில் ஒரு பகுதியால் அது தனது எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

கடந்த ஜனவரி மாதத்தில், அஸர்பைஜானின் அரச எண்ணெய் நிறுவனத்தை தனியார் மயப்படுத்தப் போவதாக ஆச்சரியமான அறிவித்தல் ஒன்றை அஸர்பைஜான் அதிகாரிகள் வெளியிட்டிருந்தார்கள். இதன் காரணமாக இசி கப்பிற்றல் போன்ற நிறுவனங்கள் இதில் ஆர்வம் கொள்வதை இலகுவில் புரிந்துகொள்ளலாம்.

**தமிழில்: ஜெயந்திரன்**

எண்ணெய் மற்றும் வாயு போன்ற விடயங்களில் வர்த்தகம் செய்துகொண்டு அதே நேரம், காலநிலை மாநாடுகளுக்கு ஆதரவளிக்கும் இசி கப்பிற்றலின் இந்த இரட்டைச் செயற்பாடு உண்மையில் ஆச்சரியமான ஒரு விடயம் அல்ல.

"காலநிலை நெருக்கடியைக் கையாளும் விடயத்தைப் பொறுத்தமட்டில், உரையாடுவதற்கு ஆக்கபூர்வமான எந்த ஆலோசனையையும் எண்ணெய் மற்றும் வாயு நிறுவனங்கள் மாநாட்டுக்குக் கொண்டுவரலாம். அதை நாங்கள் வரவேற்கிறோம்."

எப்படியிருப்பினும், இதற்கு முதல் நடைபெற்ற கொப் மாநாடுகள், எண்ணெய் மற்றம் வாயு உற்பத்தியாளர்களின் பிரதிநிதிகளால் நிறைந்திருந்தன. ஆம், இசி கப்பிற்றல் கொப் மாநாட்டில் பங்குபற்ற முடியும். முக்கியமாக மாநாட்டில் பங்குபற்றுவது மட்டுமன்றி, அதற்குத் தங்கள் நிதி ஆதரவையும் வழங்கலாம்.

உண்மையில், எண்ணெய் மற்றும் வாயு தொடர்பான ஒப்பந்தங்கள் பற்றிப் பேசுவது ஒரு எல்லையை மீறுவதாகும். கொப் மாநாட்டுடன் தொடர்பான அதிகாரிகளுக்கு ஒரு அறநெறிக் கோவை உண்டு. தங்களுக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகளைப் பயன்படுத்தி, எந்தவித தனிப்பட்ட நலன்களையும் அவர்கள் பெறமுடியாது. அந்தக் கோவையின்படி சுயநலம் அற்றவர்களாக அவர்கள் செயற்பட வேண்டும்.



சக்திக்கான துணை அமைச்சர் என்பதை விட கொப்29 இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் என்பதே தனது தற்போதைய பணி என்பதை சொல்ற்றானோவ் இசிகப்பிற்றலுக்குத் தெளிவுபடுத்துகிறார். அஸர்பைஜான் குடியரசின் அரச எண்ணெய் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் (SOCAR), முதலீட்டாளர்களுக்குப் பங்குகளை விற்கும் எண்ணம் தற்போது அதற்கில்லை.

முதலீடுகள் செய்வதற்கான வாய்ப்புகள் எவையும் இல்லை என்றோ அன்றேல் சோக்கார் நிறுவனத்துடன் இணைந்து செயற்படமுடியாது என்றோ அதனால் பொருள் கொள்ள முடியாது. இடைக்காலப் பசுமைத் திட்டங்களை முன்னெடுக்க இசிகப்பிற்றல் ஆர்வமாக இருக்கக்கூடும்.

இதுவரை எல்லாம் நன்றாக இருக்கிறது. காலநிலைக்குச் சாதகமான விடயங்கள் தொடர்பாக உரையாடுவதற்கு இசிகப்பிற்றலை சொல்ற்றானோவ் நகர்த்துவது போல் தோன்றுகிறது. ஆனால் திடீரென "மிகப்பெரிய எண்ணெய் .... வாயு வயல்கள்" என்கிறார்.

இருமுறை சிந்தித்தல் என்னும் எண்ணக்கரு சந்திப்பு முழுவதும் தொடர்கிறது. ஹைட்றோ

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## சிறப்புரிமை ... தொடர்ச்சி ...

வைப்பதற்கு பதிலாக இலங்கை சமூகத்தில் ஏனைய மக்களுடன் ஒன்றிணைப்பதே தமது நோக்கமாகுமென்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார். மேலும் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதற்காக இரண்டு நூற்றாண்டுகளாக உழைத்துவரும் மலையகத் தமிழ் மக்களை தொடர்ந்தும் தனியான இனக்குழுவாக அன்றி தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கான பணி மிகவும் சவால் நிறைந்தது. ஆனாலும் இதற்கான துரித வேலைத்திட்டமொன்று அவசியமாகும். காணியுரிமை உட்பட கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் உறுதிப்படுத்துவதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்பதோடு பிரஜைகள் என்ற வகையில் சிரமத்தை மாத்திரம் வெளிப்படுத்தாமல் அவர்கள் தமக்கான உரிமைகளையும் அனுபவிக்கும் தரப்பினராக வாழ்வதைக் காண்பதே தமது எதிர்பார்ப்பாகும்.

மலையக மக்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய 10 பேர்ச் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மலையக மக்கள் தமது காணிகளில் தேயிலையைப் பயிரிட்டு அவற்றை தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கக்கூடிய வகையில் பெருந்தோட்டத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுபோன்ற பல கருத்துக்களையும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். எனினும் அவர் நீண்ட காலமாக அரசியலில் இருந்த போதும் மலையக மக்கள் தொடர்பில் முன்னெடுத்த காத்திரமான நடவடிக்கைகள் தொடர்பில் திருப்திகொள்ள முடியவில்லை. இதைப் போன்றே மஹிந்த ராஜபக்ச இந்நாட்டில் இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதியாக பதவி வகித்திருக்கின்றார். அவர் மலையக மக்கள் சார்பாக பல காத்திரமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருக்க முடியும். எனினும் இது சாத்தியப்படவில்லை. மைத்திரிபாலவும் இதற்கு விதிவிலக்காகிவிடவில்லை. இந்நிலையில் பெருந்தோட்டங்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நோக்கிய அரசியல்வாதிகள் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததையும் அவதானிக்க முடிந்தது. கடன் வசதிகள், உரமானியம் எனப்பலவும் இதில் உள்ளடங்கும். இதனால் பெருந்தோட்டங்கள் படிப்படியாக வீழ்ச்சிப் பாதையில் பயணித்த அதேவேளை சிறுதோட்டங்கள் உற்பத்தி உள்ளிட்ட பல விடயங்களிலும் முன்நின்றன என்பதே உண்மையாகும். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்திலும் இழுபறி நிலை தொடர்கின்றமை தெரிந்ததேயாகும். கடந்தகால ஆட்சியாளர்கள் எதிர்பார்த்த சாதக விளைவுகளை மலையக மக்களுக்கு பெற்றுக் கொடுக்க தவறியுள்ள நிலையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவரது ஆட்சியில் மலையக மக்களின் வாழ்வில் பல்வேறு உரிமைகளையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று மலையக மக்களிடையே எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது.

### முதலாளிமார் சம்மேளனம்

இதனிடையே நிலையான அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் பயிர் பல்வகைப்படுத்தலை ஊக்குவிப்பதற்கும் முக்கியமான கொள்கை வகுப்பில் பங்குதாரர்களின் ஈடுபாட்டுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கான உருமாறும் சகாப்தத்தை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி தலைமையிலான புதிய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று முதலாளிமார் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்த விடயத்தில் அனைத்து பங்குதாரர்களையும் ஈடுபடுத்துவதன் மூலம் தோட்டத்துறையின் நீண்ட கால நம்பகத்தன்மை மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் ஒரு விரிவான கொள்கைக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க முடியும். மேலும் புதிய தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள புதிய திட்டங்கள் தற்போது இந்தத் துறையில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் இந்தத் தொழிற்றுறையின் இருப்புக்கான சாத்தியத்தையும் ஏற்படுத்தும் என்றும் முதலாளிமார் சம்மேளனம் நம்பிக்கை கொண்டுள்ளது. கடந்த கால அரசாங்கத்தின் கொள்கைத் தடைகள் இந்தத் துறைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து வளர்ச்சிக்கான சாத்தியத்தை குறைந்துள்ளதாகவும் முதலாளிமார் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே இது குறித்தும் ஆட்சியாளர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

• • •

## ஈரானின் தூது ... தொடர்ச்சி ...

வருமான எலான் மஸ்க் அமெரிக்காவின் முதன்மையான செல்வந்தராவார். டெஸ்லா மற்றும் டுவிட்டர் நிறுவனங்களின் தலைவர் ஈரானின் தூதுவரை இரகசியமாக சந்தித்தது குறித்த தகவல்களை இரண்டு ஈரானிய அதிகாரிகள் ஊடகத்திற்கு தெரிவித்துள்ளனர்.

ஈரானின் தூதுவர் அமீர் சயீட் ரவானிக்கும் முஸ்கிற்கும் இடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை(11) இடம்பெற்றிருந்தது. இந்த சந்திப்பு ஆக்கபூர்வமானதாக இருந்ததாகவும், விரைவில் நல்ல செய்தி தெரிவிக்கப்படலாம் எனவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த சந்திப்பு தொடர்பில் ட்ரம்பின் பேச்சாளர் செயங் கருத்து எதனையும் கூற மறுத்துவிட்டார், அதேபோலவே ஈரானிய அரசும் அது தொடர்பில் கருத்து எதனையும் கூற மறுத்து விட்டது.

அரசின் வினைத்திறன் குறித்து பணியாற்றும் திணைக்களத்தின் தலைவராக மஸ்கை ட்ரம்ப் நியமித்துள்ளபோதும் அவர் ஈரான் தொடர்பில் கடும்போக்கு கொண்டவர்களை ஏனைய துறைகளில் இணைத்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள புளோரிடா மாநிலத்தின் காங்கிரஸ் சபை உறுப்பினர் மைக்கேல் வற்ஸ், மற்றும் வெளிவிவகாரச் செயலாளராக நியமிக்கப்படவுள்ள புளோரிடா மாநிலத்தின் செனட்டர் மார்கோ றுபியோ ஆகியோர் ஈரானுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள்.

## 1987இன் யாழ் ... தொடர்ச்சி ...

செவிமடுக்காத 'இந்திய அமைதிப்படையின்'; கொலை வெறி யாட்டம் ஒரு மணித்தியாலமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது.

ஒரு மணித்தியாலத்தின் பின் மக்களின் அழு குரல் சத்தங்கள் சற்று அடங்கிக்கொண்டு போக, துப்பாக்கிச் சத்தமும் அடங்கிக் கொண்டு போனது. அந்தி சாய்ந்து, இருள் கவிழ்ந்தது. கீழ்த்தளப்பகுதியில் உள்ளவர்கள் கொல்லப்பட்டு விட்டதாக எண்ணியிருந்தனரோ என்னவோ! அங்கு படையினர் நடமாட்டம் குறைந்து, மேல்மாடியில் வைத்தியர்கள் தங்கும் பகுதியில் படையினரின் நடமாட்டம் கூடுதலாக இருந்தது. அத்துடன் அங்கிருந்து வெளிப்பகுதியை நோக்கி சுட்டுக்கொண்டிருந்தனர். இந்தியப்படையின் கிந்தி உரையாடல்கள் இராணுவ சப்பாத்துச் சத்தங்களைத் தவிர, வளாகத்தில் மயான அமைதி நிலவியது. எங்களுக்கு வெளியே என்ன நடந்தது என்று தெரியவில்லை, என்ன செய்வதென்றும் புரியவில்லை. கொறிடோர்ப் பகுதியில் இருந்த அம்மாவுக்கும் தம்பிக்கும் என்ன நடந்தது! காயமடைந்த பிரியா எப்படியிருக்கின்றார்! அப்பாவுக்கு என்ன நடந்தது! அப்பாவுடன் இருந்த தம்பிகளுக்கு என்ன நடந்தது! எந்தக் கேள்விகளுக்கும் விடை தெரியாமல் பயத்தில் உறைந்து போய் இருந்தோம். அங்கிருந்து வெளியேறிச் செல்ல முடியாது. இடையிடையே கேட்ட துப்பாக்கி வேட்டுச்ச்சத்தங்கள் காதைப்பிளந்தன. அறை வாசலில் இருந்து மெதுவாக தலையை நீட்டி கோறிடோரில் இருந்த அம்மாவும் தம்பியும் எப்படியிருக்கிறார்கள் என்று பார்த்தேன். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. அந்த இடத்தில் பலர் படுத்திருந்தார்கள். எல்லோருமே பிணங்களுடன் பிணங்களாகப் படுத்திருந்தனர். சத்தமாகவும் பேசமுடியாது. மெதுவாக இது அம்மாவா? தம்பியா? என தவழ்ந்து சென்று விசாரித்தேன். பக்கத்திலிருந்தவர்கள் 'சத்தம் போடாமல் படுத்திரு, அசைவு தெரிந்தால் சுடுவாங்கள்' என்று சொன்னதால் எனது தேடலை தொடர முடியவில்லை. அப்படியே படுத்தேன், மனது வலித்தது. ஒவ்வொரு நிமிடமும் கனமாக இருந்தது.

கிருஷண பகவான், கொடூர குணம் கொண்ட நரகாசுரனை வதம் செய்து மக்களைக் காப்பாற்றிய நாளை, இந்தியதேசம் தீபாவளித் திருநாளாகக் கொண்டாடும் தினத்தில் நிகழ்ந்தது இந்தக் கொடூரம்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. மக்களிடையே மயான அமைதி. இராணுவத்தின் குரல்கள் மட்டும் இடையிடையே பலமாக கேட்டுக் கொண்டிருந்தன. அந்த மயான அமைதிக்குள் 'ஐயோ என்னைக் காப்பாற்றுங்கோ! என்னைக் காப்பாற்றுங்கோ!' என்ற, ஒரு பெண்ணின் அவலக்குரல் போராடி ஓங்கி ஒலித்து பின்னர் தளர்ந்து அடங்கிக்கொண்டிருந்தது. அந்த அவலக் குரலைத் தாண்டிக் கேட்ட இராணுவச் சிப்பாய்களின் வெறிக்கூச்சல்கள் கட்டிடத்தை அதிரவைத்தன. எல்லோரும் கொல்லப்பட்டு விட்டார்களா? என்பதை அடிக்கடி சுற்றி வந்து உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பது இடையிடையே கேட்ட பூட்ஸ் சத்தங்கள் மூலம் உணர முடிந்தது. நாங்கள் கொறிடோரின் முடிவுப்பகுதிக்கு சற்றுமுன்னால் இருந்த அறை வாசலில் இருந்தோம்.அக்கொறிரோடில் பலர் கொல்லப்பட்டிருந்தனர். பலர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். நடு இரவில் ஒருவர் 'வீ ஆர் சிவிலியன்ஸ் பிளீஸ் டோன்ற் கில் அஸ்' என சத்தமாகக் கூறினார். சிறிது நேரத்தில் மேல்மாடியிலிருந்து இராணுவம் நடந்துவரும் சத்தம் கேட்டது. அதைத்தொடர்ந்து குரல்வந்த பகுதியை அதிரவைத்த குண்டு சத்தமும் தொடர்ந்து கேட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தமும் அமைதியைக் குலைத்தன. அதன் பின்னர் அந்த மனிதரின் சத்தம் கேட்கவேயில்லை. பலர் காயப்பட்டு சிகிச்சையின்றி இறந்தனர். சிலர் இரத்தம் போக தண்ணீர் கேட்டு முனகிக் கொண்டிருந்தார்கள். காயப்பட்டு மரணத்தின் விழிம்புக்கு சென்று கொண்டிருந்தவர்கள் தங்களின் உயிரைக் காப்பாற்றலாம் என்ற ஆதங்கத்திலே அல்லது சுயநினைவின்றியோ காப்பாற்றுமாறு எழுப்பிய அபயக்குரல் அவர்களின் ஆத்மாவிற்கு விடை கொடுத்துக் கொண்டிருந்தது.

அம்மாவும் தம்பியும் எங்காவது கண்ணில் தென்படுகின்றார்களா? என எட்டிப்பார்த்தபோது கொறிடோரின் முடிவில் அம்மாவும் தம்பியும் வேறு சிலரும் படுத்திருந்தது தெரிந்தது. காயப்பட்ட பிரியா அம்மாவிற்கு முன் படுத்திருந்தார். அவர்களுக்கு முன்னுள்ளவர்கள் கொல்லப்பட்டிருந்தனா.; சிலர் காயத்துடன் கிடந்தனர். எல்லோரும் பிணங்களுடன் பிணங்களாகவே கிடந்தனர். அடுத்தது என்ன நடக்குமோ! கொல்லப்பட்டுவிடுவோமா! என்ற அச்சம் ஒன்றுசெர, ஒருவரையொருவர் நிசப்தமற்றுப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

தொடரும்...

## எண்ணெய் ... தொடர்ச்சி ...

காபனை விட்டு ஒழுங்கு முறையாகவும், அதே நேரம் சமமாகவும் நாம் மாற்றமடைய வேண்டும் என்றும் கூறி, கொப்29 மாநாட்டின் காலநிலை இலக்குகளை நோக்கி அவர் நகர்கிறார். கொப் எண்ணெய் மற்றும் வாயு சம்பந்தப்பட்ட விடயம் அல்ல. அதற்குப் பதிலாக அது காலநிலை நெருக்கடி மற்றும் அதனை நாங்கள் எப்படிக் கையாள்கிறோம் என்பது தொடர்பானதாகும்.

ஆனால், அவரது ஏனைய கூற்றுகள், இந்த உயர்வான நோக்கங்களுக்கு எதிராகவே இருக்கின்றன. எண்ணெய் உற்பத்தி குறைந்து கொண்டு செல்லும் அதே நேரம், படிம வாயு உற்பத்தியை அதிகரிக்க அஸர்பைஜான் திட்ட மிட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறி, இடைக் காலத்து எரிபொருள் என்று அதன் செயற்பாட்டை அவர் வலியுறுத்துகிறார்.

சொல்ற்றானோவின் நிகர-பூச்சிய உலகில் “ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணெயையும், வாயுவையும் நாங்கள் எப்போதும் உற்பத்தி செய்துகொண்டிருப்போம்.”

இசிகப்பிற்றல் போன்ற ஒரு எதிர்கால முதலீட்டாளர் இவ்வாறான ஒரு முரட்டுத்தனமான கண்ணோட்டத்தினூடாக எவ்வாறு சமாதானப் படுத்தப்படலாம் என்பதை ஒருவரால் புரிந்து கொள்ள முடியும்.

2015ம் ஆண்டில் பாரிஸ் ஒப்பந்தத்தில், உலக நாடுகள் இணங்கியது போன்று, பூகோள ரீதியிலான வெப்ப உயர்வை தொழிற்றுறைகளுக்கு முற்பட்ட காலத்துச் சராசரி வெப்பநிலையை விட உயர்வான வகையில் 1.5 பாகை சென்ரிகிரேட்டில் பேணும் இலக்குக்கு, புதிய படிம எரிபொருள் மற்றும் வாயுத் திட்டங்கள் அனுகூலமாக இருக்க மாட்டாது என்ற பன்னாட்டு சக்தி நிறுவனத்தின் அறிவுரைக்கு இது முற்றிலும் எதிரானதாகும்.

ஒன்றுக்கொன்று முரண்பட்ட பணிநிலை களான, கொப்29 இன் நிறைவேற்றுப் பணிப்பாளர், அதேநேரம் அஸர்பைஜான் நாட்டின் சக்தி அமைச்சர் என்ற வகையில், நாட்டின் எண்ணெய் மற்றும் வாயுத் துறைகள் தொடர்பான உரையாடல்களை சொல்ற்றானோவ் நெறிப்படுத்துகிறார்.

உங்களையும் அஸர்பைஜான் குடியரசின் எண்ணெய் நிறுவனத்தையும் தொடர்புபடுத்தி விடுவதாக அவர் உறுதியளிக்கிறார். ஏனென்றால் பின்னர் அவர்கள் அந்தக் கலந்துரையாடல்களைத் தங்களுக்கிடையே தொடரலாம்.

அதே நேரம், கொப் மாநாடு எண்ணெய் மற்றும் வாயு தொடர்பானது அல்ல... கால நிலை நெருக்கடியைத் தீர்ப்பதே அதன் இலக்கா கும். ஆனால் கொப் மாநாட்டில் பங்குபற்றிக் கொண்டிருக்கும் சமகாலத்தில, சோக்கார் (SOCAR) நிறுவனத்துடனும் நீங்கள் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளலாம். அவர்களோடு உரையாட வேண்டிய விடயங்களை உரையாடிக்கொண்டே கொப் மாநாட்டில் நீங்கள் பங்குபற்றலாம்.

அபிவிருத்தி செய்யப்படவேண்டிய எண் ணெய் வயல்கள் இங்கே இருக்கின்றன. சோக்காரின் வர்த்தக அலகான அஸர்பைஜானுடைய குழாய்க்கட்டமைப்பு, ஆசியா உட்பட உலகம் முழுவதும் எண்ணெய் மற்றும் வாயு வர்த்தகத்தை முன்னெடுத்து வருகிறது.

உண்மையில் கொப் மாநாட்டில் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளுக்கும் இடமுண்டு.

சோல்ற்றானோவுடன் மேற்கொள்ளப் பட்ட சந்திப்பின் பின்னர், இசி கப்பிற்றல் தான் முன்னெடுத்த வேலையைத் தொடர்கிறது. நவம்பரில் அடுத்த தடவை பாக்கு (Baku) நகரத்துக்கு வரும் போது சோக்காருடன் முதலீடுகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளைத் தொடரும் முகமாக சோக்காருடன் அறிமுகத்தைக் கேட்கிறது. சில நாட்களின் பின்னர் சோல்ற்றானோவ் அதற் கான ஒழுங்குகளைச் செய்து தருகிறார்.

பாக்கு நகரத்தில் தங்களைச் சந்திக்குமாறு, சோக்காரின் உயர்நிலைப் பணிப்பாளர்களில் ஒருவரான, எல்ஷாட் நஸீரோவ் (Elshad Nassirov) இசி கப்பிற்றலுக்கு அறிவிக்கிறார்.

கொப்29 மாநாடு நடைபெறும் சமகாலத் தில், வெளிப்படையாகவே எண்ணெய் தொடர் பான ஒரு ஒப்பந்தம் தொடர்பாக உரையாடுவதற்கு, காலநிலை மாநாட்டுக்கான நிதி ஆதரவை அளிக்கும் தோரணையில், அஸர்பைஜான் குடியரசின் எண்ணெய் நிறுவனத்தின் உயர் பணிப்பாளர்களில் ஒருவரைச் சந்திக்க இசி கப்பிற்றலுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

ஒரு போலி அமைப்பான இசிகப்பிற்றலால், எண்ணெய் மற்றும் வாயு ஒப்பந்தங்களையோ அன்றேல் மாட்டுக்கான நிதி ஆதரவை வழங்கும் ஒப்பந்தங்களையோ ஒப்பமிட முடியாது. ஆனால் எழுமானமாக, இவ்வாறான காலநிலை மாநாடுகளில் பங்குபற்றும் எண்ணெய் மற்றும் வாயு உற்பத்தியாளர் கூட்டத்தை இசிகப்பிற்றல் பிரதிநிதித்துவம் செய்கிறது.

இசி கப்பிற்றலைப் போன்றே, இந்த மாநாட்டில் பங்குபற்றும் பல அமைப்புகளுக்கு, காலநிலை தொடர்பாக உருவாக்கப்படும் கொள் கைகளில் எந்தவிதமான ஆர்வமும் இல்லை. ‘மனித குலத்தின் கடைசி நம்பிக்கை’ என வருணிக்கப்படும் இவ்வாறான சந்தர்ப்பங்களில், வர்த்தகம் செய்வதற்கான வாய்ப்பை இவர்கள் தேடியலைகிறார்கள்.

**நன்றி: Global Witness**

## காற்றோடு ... தொடர்ச்சி ...

கைக்கெட்டும் தொலைவில் இருந்த கடலின் அலைகள் மட்டுமே கடலின் மொழியில் அவர் களுடன் பேசிக் கொண்டிருந்தன.

நள்ளிரவு 12.35க்கு, 17 கடல்மைல் தொலை வில், காங்கேசன்துறையில் கயல் என்கிற உயிர்வெடி வெடித்துச் சிதறிய சத்தம், தோழிகள் காத்திருந்த கடற்கரை வரை கேட்டது. ஒட்டு மொத்தக் கடற்பரப்பையும் அதிரச் செய்தது அந்த வெடிச்சத்தம். அதைக் கேட்டவுடன், கடற் கடையில் காத்திருந்த கயலின் தோழிகள் துள்ளி எழுந்தனர். அபித அவுட்-என்று அவர்கள் எழுப்பிய சத்தம், காற்றைக் கிழித்தது. அடுத்த நொடியே அந்த உற்சாகம் வடிந்துபோய், அபிதவுடன் சேர்ந்து கயலும் சிதறியிருப்பாள் என்கிற யதார்த்தம் உணர்ந்து, உறைந்துபோய் நின்றார்கள் அவர்கள். அந்த நடுநிசியில், அந்தத் தோழிகள் சிந்திய கண்ணீர்தான், கயல் என்கிற அந்த மகத்தான மனுஷியின் கடற் கல்லறையில் உடனடியாகத் தெளிக்கப்பட்ட பன்னீர்.

காங்கேசன்துறைக் கடற்பரப்பில், காற்றோடு காற்றாய்க் கலந்துவிட்ட அங்கயற் கண்ணி, தனக்கான இலக்கைத் தகர்த்தழித்த தோடு சென்றுவிடவில்லை. அபித கப்பலுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக அதற்கு அருகிலேயே நின்று கொண்டிருந்த பீரங்கிக் கப்பலான டோரா கப்பலையும் சேர்த்துச் சாம்பலாக்கி யிருந்தாள். மிகுந்த விசுவாசத்துடன், தாய்க் கப்பலுடன் சேர்ந்து உடன்கட்டை ஏறியிருந்தது அந்த டோரா கப்பல்.

இந்தத் தாக்குதல் நடப்பதற்கு ஓரிரு மாதங்களுக்குமுன், இயக்கம் கொடுத்த விடுமுறை நாளொன்றில் தன் தாயைப் பார்க்கச் சென்றிருந்த கயல், தன்னைப் பற்றிக் கவலைப்பட்ட தாயிடம் சொன்ன வார்த்தைகளை நினைக்கும் எவராலும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாது. ‘என்னைப் பற்றிக் கவலைப் படாதே அம்மா... நான் காற்றோடு காற்றாகக் கரைந்துவிடுவேன்’ என்கிற அவளது வார்த்தைகள் தமிழீழப் போராட்ட வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை. தன்னிடம் மகள் சொன்ன அந்த வார்த்தைகளை, அந்த வீரத்தாய் சொல்லிச் சொல்லி அழுததை நம்மில் எவரும் மறந்துவிடக் கூடாது.

தம்முயிர் குறித்து கவலைப்படாமல், தங்கள் மண்ணுரிமைக்காகப் போராடி, விடுதலை வேள்விக்குத் தம்மைத் தாமே ஆகுதி ஆக்கிய ஆயிரமாயிரம் மாவீரர்களின் மூச்சுக் காற்றும், தமிழீழத் தாய்மண்ணின் காற்றோடு காற்றாக கரைந்துவிட்டிருக்கின்றன. அந்தக் காற்றை சுவாசிக் கிற எவராலும் அதை உணர முடியும். ஆனையிரவு களத்தில், துப்பாக்கியேந்திய கையோடு தன் ஆழ்மன உணர்வைக் கவிதையாய் வடித்த கேப்டன் வானதியின் குரல், ‘எழுதுங்களேன்..... நாங்கள் எழுதி முடிக்காது போன கவிதையை யாராவது எழுதுங்களேன்’ என்று அந்தக் காற்றில் மீண்டும் மீண்டும் ஒலித்தபடியே இருக்கும்.

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் – சர்வேசா இப் பயிரைக் கண்ணீரால் காத்தோம் கருக திருவுளமோ என்கிற பாரதியின் இதயத்தை நனைக்கும் ஈரத் தமிழ், ஈழத்துக்கும் அச்சு அசலாகப் பொருந்துகிறது. பல்லாயிரக்கணக்கான மாவீரரின் செந்நீராலும், அவர்களது உறுதியை நினைந்து நினைந்து நெக்குருகும் எம் உறவுகளின் கண்ணீராலும், வீரம் விளைந்த அந்த பூமி, ஈரமாகவே இருக்கிறது இன்றும்! அந்தச் செந்நீருக்கும் கண்ணீருக்கும் விடை கிடைக்காது போய்விடாது என்கிற எதிர்பார்ப்புடன்தான், வேழத்தைப் போலவே நிலைகுலையாது காத்திருக்கிறது காலம்.

• • •

## குதீஸ் படை ... தொடர்ச்சி ...

மாதங்களாக அவர்கள் மேற்கொள்ளும் தாக்குதல் கள் மற்றும் அதற்கு பயன்படுத்தும் ஆயுதங்கள் என்பன எம்மை ஆச்சரியப்பட வைத்துள்ளன. குதீஸ் அமைப்பினரிடம் மிக நவீன ஆயுதங்கள் உள்ளன. அவர்களின் ஏவுகணைத்திறன் மிகவும் அபார மானது என அவர் அந்த மாநாட்டில் மேலும் தெரிவித்திருந்தார்.

சானாவைத் தலைநகராகக் கொண்ட ஏமன் பகுதியை குதீஸ் அமைப்பினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். கடந்த வருடத்தின் நவம்பர் மாதம் முதல் காசா மக்கள் மீதான இஸ்ரேலின் போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக செங்கடல் பகுதியில், இஸ்ரேல் மற்றும் அதன் கூட்டணி நாடுகளின் கப்பல்களைத் தாக்கி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை(12) அரேபியன் கடல் பகுதியில் நின்ற அமெரிக்காவின் ஏபிர காம் லிங்கன் என்ற விமானந்தாங்கி கப்பல் மீதும் அதற்கு துணையாக நின்ற இரண்டு டிஸ்ரேயர் கப்பல்கள் மீதும் ஏவுகணை மற்றும் ஆளில்லாத தாக்குதல் விமானங்கள் மூலம் குதீஸ் அமைப்பினர் தாக்குதலை மேற் கொண்டிருந்தனர்.

தாக்குதல் வெற்றிபெற்றதாக குதீஸ் அமைப்பினர் தெரிவித்தபோதும், தாம் அதனை முறியடித்து விட்டதாகவும், கப்பல்களுக்கு சேத மில்லை எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## தமிழர்களின் ... தொடர்ச்சி ...

பி.யிலிருந்த வந்த தெசிய மக்கள் சக்தி ஒரு சிங்களத் தேசியவாதக் கட்சி. இந்தத் தேர்தலின் போது அதனை அவர்கள் முன்னிலைப்படுத்தவில்லை. கடந்த 2015 - 2019 காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அரசியலமைப்பாக்க முயற்சியைத் தொடரப் போவதாகவே அவர்கள் கூறுகின்றார்கள்.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அநுர அரசு பெற்றிருப்பதும், சிங்கள இனவாதிகள் இத்தேர்தலில் மோச மாகத் தோற்கடிக்கப்பட்டிருப்பதும், இன நெருக் கடிக்கு நியாயமான தீர்வை வழங்கக்கூடிய வகையில் புதிய அரசியலமைப்பு ஒன்றை முன் னெடுப்பதற்காக வாய்ப்பை புதிய அரசாங்கத்துக்கு கொடுத்திருக்கின்றது. அதனை அவர்கள் பயன்படுத்துவார்களா? அதற்கான அழுத்தத்தை தமிழ்க் கட்சிகள் கொடுக்குமா?

• • •

## தமிழ்த்தேசிய ... தொடர்ச்சி ...

அதேபோல் தமிழரசுக்கட்சியில் தனிநபர் ஆதிக்கம், ஒருவர் எடுக்கும் முடிவை கட்சி முடிவாக வெளிப்படுத்துதல், என்பன இந்த தேர்தலில் தமிழரசுகட்சியை தோற்கடிக்க வேண்டும் என்ற மனநிலை தமிழர்கள் மத்தியில் பரவலாக இருந்தது. புலம் பெயர் அமைப்புகளும் உறவுகளும் வெளிப்படையாக தமிழரசுகட்சியில் உள்ள பேச்சாளர் என கூறப்படும் சுமந்திரனை தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற தீவிர பிரசாரங்களையும் முடக்கி இருந்தனர்.அதை யாழ் மாவட்ட தமிழ் மக்கள் வாக்கு சீட்டால் வெளிக் காட்டினர் என்பதே உண்மை.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட பா.அரியநேத்திரன் *226432,* வாக்குகளை பெற்று இலங்கையில் ஐந்தாவது இடத்தை பெற்றார். அதில் கிழக்கு மாகாணத்தை விட வடமாகாணதமிழ் மக்கள் *116000,* வாக்குகளை அளித்து தமிழ்த்தேசிய ஒற்றுமையின் பலம், உறுதி என்பவற்றை உலகத்துக்கு காட்டினர். ஆனால் அதே மக்கள் இதனை வெளிக்காட்ட வேறு பல கட்சிகள் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டன, தமிழ்த்தேசிய ஆதரவு சுயேட்சை குழுக்களுக்கும் போட்டியிட்டன,வாக்களிக்காமல் சிங்கள கட்சிக் கும், கோமாளி சுயேட்சை குழுவையும் ஆதரித்து தமிழ்தேசிய கட்சிகள் மீது இருந்த கோபத்தை வெளிக்காட்டி உள்ளனர் என பலரும் கூறுவதையும் அவதானிக்கமுடிகிறது.

ஆனால் அந்த கருத்தை ஏற்கமுடியாது ஏனெனில் யாழ்மாவட்டத்தில் வேறுபல கட்சிக ளும் சுயேட்சை குழுக்களும் யாழ்ப்பாணத்தில் தேர்தலில் நிறுத்தப்பட்டிருந்தன அந்த அமைப்புக் களுக்கு கூட தமிழ்மக்கள் வாக்களித்திருந்தாலும் ஓரளவு ஏற்றுக்கொள்ள கூடியதாய் இருக்கும்.

எப்படி இருந்தும் *1994,* தொடக்கம் *2020,*ம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் ஈபிடிபி கட்சித்தலைவராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், தொடர்ந்து அமைச்சராகவும், தமிழ்த்தேசியத்திற்கு எதிரான நிலைப்பாடுடன் செயல்பட்ட டக்ளஸ் தேவானந்தா நிராகரிக்கப் பட்டுள்ளார்.

அதேபோல் மட்டக்களப்பில் *2008,*ல் கிழக்கு மாகாண முதலமைச்சராகவும், அதன் பின்னர்*2020,* வரைபாராளுமன்ற உறுப்பினராகவும் செயல்பட்ட கிழக்கை மீட்பதாக கூறி பிரதேச வாத அரசியல் செய்த தமிழ் மக்கள் விடுதலைப்பு லிகள் கட்சிதலைவர் பிள்ளையான் தோற்கடிக் கப்பட்டுள்ளார்.

அதேபோல் மகிந்த ஆட்சிக்காலத்தில் ஒட்டுக்குழுக்களாக செயல்பட்டு பின்னர் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக சிறிது காலம் செயல்லபட்ட கருணா போன்ற துரோகிகளும் இந்த தேர்தலில் முற்றாக துடைத் தெறியப்பட்டுள்ளனர்.

இது போல் ஜன நாயக தமிழ்தேசிய கூட்டணி என கடந்த *2023*ல் குத்துவிளக்கு சின்னத்தில் அறிமுகமான ஈபிஆர்எல்எவ், புளட், ரெலோ, ஜனநாயபோராளிகள், எனப்படுவோர் இம்முறை தேர்தலில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் பா.அரியநேத்திரன் போட்டியிட்ட சுயேட்சை சின்னமான சங்கை குத்துவிளக்கிற்கு பதிலாக மாற்றி இந்த தேர்தலில் வடகிழக்கில் வேட்பாளர்களை நிறுத்தப்பட்ட போதும் மன்னாரில் செல்வம் அடைக்கலநாதன் தவிர்ந்த அனைவரும் கூண்டோடு தோற்கடிக்கப்பட்டனர். இதன்வெளிப்பாடு “சின்னங்களை மாற்றுவதால் தமிழர்களின் எண்ணங்களை மாற்ற முடியாது” என்று நான் அடிக்கடி கூறும் கருத்து இதில் வெளிக்காட்டப்பட்டுள்ளது என்பதே உண்மை.

இம்முறை பாராளுமன்ற தேர்தலில் பல கட்சி வேட்பாளர்கள் பலகோடி நிதி களை செலவு செய்தமை கண்கூடு. நிவாரண பொதிகள், மதுபானங்கள், உட்பட கையூட்டல் (பணபரிமாற்றம்) வழங்கியும் தமது இலக்கங் களுக்கு புள்ளடி இடுமாறு முகவர்களுக்கும் பணம் வழங்கி இவ்வாறான வேண்டத்தகாத செயல்களையும் வேட்பாளர்கள் சில தமிழ் ஊர்களில் நடந்தன.

மொத்தத்தில் இம்முறை பத்தாவது பாராளுமன்றம் தேசிய மக்கள் சக்தியால் சுத்தம் செய்யப்பட்டாலும் ஓரிரு வருடங்களால் அவர்களுக்கு வாக்களித்த மக்களே அவர்களை எதிர்க்கும் நிலை வரும்.

குறிப்பாக வடகிழக்கு தாயக மக்கள் விரைவில் அவர்களின் உண்மை முகத்தை அறிவார்கள்.

• • •

## இஸ்ரேலின் ... தொடர்ச்சி ...

பகிரங்கமாகவே கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். காசாவுக்கு செல்லும் உதவிப் பொருட் களையும் இஸ்ரேல் மிகவும் தந்திரமாக தடுத்து வருகின்றது. தனது அரசியல் மற்றும் படைத் துறை நலன்களுக்காக இஸ்ரேல் அதனை பயன்படுத்துகின்றது.

ஐ.நா தீர்மானங்கள், ஐ.நாவின் அனைத் துலக நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் மற்றும் ஐ.நா பாதுகாப்புச் சபையின் தீர்மானங்கள் எதனையும் இஸ்ரேல் மதிப்பதில்லை என்பதுடன், அவற்றை உதாசீனப்படுத்தி காசாவில் வாழும் மக்களை கூட்டாக தண்டித்து வருகின்றது என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இதுவரையில் *43,736* மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், *103,370* பேர் காயமடைந்துள்ளனர். *42* மில்லியன் தொன் குண்டுச் சிதறல்களை ஏற்படுத்தக்கூடிய *75,000* தொன் வெடிகுண்டுகளை இஸ்ரேல் இதுவரையில் காசா பகுதி மீது வீசியுள்ளது. *114* வைத்தியசாலைகள் அழிக்கப்பட்டுள்ளதுடன், *165* வைத்தியர்கள் உட்பட *986* மருத்துவத்துறை பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## வடக்கு, கிழ ... தொடர்ச்சி ...

அதேபோன்று திகாமடுல்ல மாவட்டம் (அம்பாறை) *5,55,432* வாக்காளர்களை கொண்டு ள்ள நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் *3,80,523*பேர் வாக்களித்த அதேநேரம் *1,74909* பேர் வாக்களிக்கவில்லை. வாக்களித்த *3,80,523* பேரில் *17,599* பேரின் வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய *3,62,924*பேரின் வாக்குகளே செல்லு படியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கிழக்கு மாகாணத்தில் *4,19,713* பேர் வாக்களிக்காத நிலையில் *46,465* வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

## தேர்தலில் மகத் ... தொடர்ச்சி ...

**உருவாக்குதல்,சதுப்பு நிலங்கள் வனங்கள் வலுச் சக்தி மேலும் சில இலங்கையின் அனைத்து நண்பர்களும் அதற்கு உதவ தயாராகவேண்டும்.**

## சீனாவுக்கு ... தொடர்ச்சி ...

சபைக்கான தூதுவராகவும் நியமிக்கப்பட்டுள்ள னர்.

புளோரிடா மாநிலத்தின் செனட்டர் மார்கோ றுபியோ வெளிவிவகாரச் செயலா ளராக நியமிக்கப்படலாம் என தெரிவிக்கப் படுகின்றது. மேற்கூறப்பட்ட ஐந்து போரும் சீனாவுக்கு எதிரான கடுமையான நிலைப் பாட்டைக் கொண்டவர்கள்.

முன்னைய ஆட்சிக் காலத்தின் போது டிறம் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் *380* பில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களின் மீது அதிக வரிகளை விதித்திருந்தார். தற்போதும் அவர் தனது பிரச்சாரங்களில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு *60* விகித வரியையும், ஏனைய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு *10* தொடக்கம் *20* விகித வரியையும் விதிக்கப் போவதாக தெரிவித்திருந்தார்.

றுபியோ தாய்வானுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டவர். *2027* ஆம் ஆண்டு சீனா தய்வானை ஆக்கிரமிக்கலாம் என்று அமெரிக்க படைத்தளபதிகள் தெரிவித்துவரும் நிலையில் அந்த காலப்பகுதியில் டிறம் ஆட்சியில் இருக்கப்போவது குறிப்பிடத்தக்கது.




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

## சிறிலங்காவின்... தொடர்ச்சி ...

மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதால் தமிழரசுக் கட்சி பொருத்தமான தலைமையில்லாத நிலையில் அனாதரவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து திரு.சி.சிறிதரரன்; மற்றும் திரு.மாவை சேனாதிராஜா ஆகியோர் சுமந்திரன் அவர்களின் செயற்பாடுகளினால் வஞ்சிக்கப்பட்டனர். அதே வேளை தலைநகர் கொழும்பில் நீண்டகாலமாத் தமிழரசுக் கட்சியைச் சிறப்பாக வழிநடத்திய ஜனாதிபதி சட்டத்தரணி திரு. தவராஜா அவர்களையும் தனது தொழில் போட்டி காரணமாக அவரையும் ஓரங்கட்டித் தமிழரசுக் கட்சியில் இருந்தும் வெளியேற்றினார். அதேவேளை பொதுத் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியிலில் சேர்ப்பதற்காக மாவை சேனாதிராஜா தயாரித்துக் கொடுத்த பட்டியலை ஏற்கமறுத்ததால், மாவை சேனாதிராஜா அவர்களும் தேர்தலில் இருந்தே முற்றாக ஒதுங்கியிருக்கும் நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் கட்சியின் சகலவிடயங்களையும் தீர்மானிக்கும் மாபெரும் சக்தியாக திரு.சுமந்திரனே விளங்கியதால் ஏனைய தமிழரசுக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பிளர்களும் அச்சம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ ஒதங்கியிருந்தனர்

இந்த நிலையிலேயே இலங்கையின் 10ஆலது நாடாளும்னறத் தேர்தலில் தமிழ் தேசியக் கட்சிகள் ஐந்தாகப் பிளவடைந்து வெவ்வேறு சின்னங்களில் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாராக நின்றன.இது அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்பட்ட கட்சிகளுக்கும்,ஒட்டுக் குழக்களுக்கும்,அநுர குமார திசநாயக்காவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கும் வாய்ப்பாகப் போய்விட்டது.

தமிழ் தேசியக் கட்சிகளின் பதவி ஆசை;,அதிகார டீமாகம். பலகோடி ரூபா சொத்துக்களைச் சேகரிப்பதில் காட்டிய ஆர்வம்,மதுபான சாலைகளுக்கான அனுமதியைப் பெற்றுக் nhhள்வதில் காட்டிய வேகம்,தமிழகளின் பிரச்சினைகளில் அக்கறை காட்டாத தன்மை,காணாமல் போன தமிழர்களின் குடும்ப உறுப்பினர்களின் போராட்டத்தில் ஈடுபாடு காட்டாது இருந்தமை, தமிழர் நிலங்களை விடுவிப்பதில் எவ்வித முயற்சிகளும் எடுக்காமை, தொல்பொருட் சின்னங்கள் அழிக்கப்பட்டபோது அல்லது அவை பௌத்த சின்னங்களாக டாற்றப்பட்டபோதும் சட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடக்கத் தவறியமை போன்ற பல்வேறு காரணிகளினால் வடபகுதித்தமிழ்மக்கள் தமிழரசுக் கட்சி,தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி போன்ற தமிழ் தேசியக் கட்சிகளின்மீதும் அதன் தலைவர்கள்மீதும் கடுமையான வெறுப்பையும் அதிருப்தியையும் கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் அதஜகளவஜலான வாக்குகளால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசநாயக்காவின் கவர்ச்சிகரமான பேசசு,சில அதிரடியான நடவடிக்கைகள் என்பவற்றால் ;சினால் கவரப்பட்ட வடமாகாண மக்கள் தமிழ் தேசியக் கட்சிகளுக்கு ஒரு பாடம் கற்பிப்பதற்காக ஒன்று திரண்டு திசைகாட்டி சின்னத்திற்கு 50 வீதத்திற்கு மேல் வாக்களித்தனர். இதனால் அவர்களில் மூன்று பேரை வெற்றியடையச் செய்துள்ளனர் என்ற அந்தச் செய்தி தாயகத்தில் தேசியத்தை நேசிக்கும் தமிழர்களிடையே மட்டுமல்லாது, புலம் பெயர்ந்த தமிழர்களிடையேயும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் மட்டக்களப்புத் தமிழ் மக்கள் தமது கொள்கையில் உறுதியாகச் செயறபட்டதால் தமிழரசுக் கட்சி மூன்று ஆசனங்களைப் பெற்றுத் தலைநிமிரவைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை வடக்குக் கிழக்கு அரசியலில் ஏற்பட்ட இந்த மாற்றமானது அநுரா அலையின் காரணமாக ஏற்பட்ட மாற்றமில்லை என்பதுடன் தமிழ் அரசியல்வாதிகளில் ஏற்பட்ட கோபம் மற்றும் வெறுப்பின் காரணமாகவே ஏற்பட்ட மாற்றம் என்பது தெளிவாகத் தெரிகின்றது என்றும், தமிழ் மக்கள் இதுவரை காலமும் தமிழ் அரசியல்வாதிகளை நம்பியிருந்து அவர்களால் ஏமாற்றப்பட்டு எதிர்காலத்தில் சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளைத் தூக் எறிந்து விட்டுத் தமது உரிமைகளைத் தாமே பெற்றுக் கொள்வதற்கான போராட்ட வடிவத்தின் ஆரம்பமோ என்று எண்ணும் வகையில் தம்மை விடுலைப் போராட்டத்திற்கு தயார் செய்வதற்கான ஒரு முன்னோடி என்;பதை இன்று இராஜதந்திரிகளும்,ஊடகங்களும்; சுட்டிக்காட்டியுள்ளன.

தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாண மக்களை இதுவரை காலமும் பகடைக் காய்களாக்கி அவர்களைத் தமது அடிமைகளாக வைத்திருந்து, அவர்களின் முதுகில் ஏறிச் சவாரிசெய்த தமிழ் அரசியல்வாதிகளுக்கு,இந்தத் தேர்;தலின் மூலம் தமிழ் மக்கள் தகுந்த பதிலடி கொடுத்துள்ளனர். இது அவர்களுடைய மனதில் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கும்.

தங்களை எவரும் வெல்லமுடியாது என்று தாம் நினைத்ததைச் சாதித்துக் கொண்டருக்கலாம் என்ற எண்ணத்துடன் கோலோச்சி கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்து சுகபோகத்தை அனுபவித்து வாழ்ந்துவந்த பிள்ளையான்,கருணா என்னும் முரளிதரன்.சுமந்திரன்,சித்தார்த்தன், டக்ளஸ் தேவானந்தா,அங்கஜன் இராமநாதன் போன்ற தமிழ் தேசியத்திற்கு எதிரானவர்களை மக்கள் ஒன்று திரண்டு தூக்கி எறிந்திருக்கின்றார்கள் என்பது தமிழ் மக்கள் அடைந்த பெரு வெற்றியாகும்

யாழ்ப்பாணம் தோல்வியடைந்தால் அது ஒட்டுமொத்த வடக்கு கிழக்கையும் பாதிக்கும். என்பதை தமிழ் தேசியநீக்க தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளாது தமக்குள் தாமே பதவிகளுக்காகவும், பணத்திற்காகவும், அதிகாரத்திற்காகவும் வெவ்வேறு அணிகளாகப் பிரிந்து நின்றதன் வினைவை இன்று பார்க்கின்றோம். இவ்வாறான நிலை தொடர்ந்தும் நீடிக்குமாக இருந்தால் உள்ளூராட்சிமன்றத் தேர்தலிகளிலும்,மாகாண சபைத் தேர்தலிகளிலும் தேச்ய மக்கள் சக்தியின் ஆதிக்கம் மேலோங்கி தேசிய மக்கள் சக்தி அனைத்துச் சபைகளையும் கைப்பற்றலாம் என்பதை தமிழ் அரசியல்வாதிகள் நினைத்துக் பார்க்கவேண்டும்.

அதேவேளை அடிபட்ட புலி ஆளைக் கொல்லாது விடாது என்பதுபோல், தமிழரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டுப் படுதோல்வி அடைந்த திரு.சுமந்திரன் மக்களால் நிராகரிக்கப்பட்ட சிலையில் தோல்வி அடைந்தால் தேசியப் பட்டியல் ஆசனத்தின் மூலம் மீண்டும் பாராளுமன்றத்திற்குள் நுழையமாட்டேன் என்று தெரிவித்த அந்தக் கனவான் வாக்குறுதியைத் தொடர்ந்தும் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடையே இரு;கின்றது.தேசியப் பட்டியல் அங்கத்துவமானது தேர்தலில் போட்டியிடாத, துறைசார் நிபுணர்களையும்,கல்வியாளர்களையும்,தொழில் வல்லுனர்களையும் தேசியப் பட்டியலின் மூலம் கொண்டுவந்து, பாராளுமன்றத்தின்மதிப்பைஉயர்த்துவதற்காகவே உருவாக்கப்பட்டதே ஒழிய, மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களையுமட, கட்சியின் விசுவாசிகளையும் மீண்டும் பின்கதவு வழியாகப் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவருவதற்கான ஒரு வழிமுறையாக இருக்கக்கூடாது என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும் புரிந்து கொள்ளவேண்டும்

தமிழரசுக்கட்சியின், தேசிய பட்டியல் ஆசனம் ஒரு பெண்ணுக்கு வழங்க வேண்டும் என்பதே பெண்ணிலைவாதிகளினதும், நீதியின்பால் நின்று செயறபடும் அரசியல் தலைவர்களினதும் எதிர்பார்ப்பாகும்.ஏனெனில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஏழு உறுப்பினர்களில் எந்த ஒரு பெண்ணும் இடம்பெறவில்லை என்பது கவலையான ஒரு விடயம்.

எனவே இந்தத் துயரம் தோய்ந்த தேர்தல் முடிவுகளில் இருந்தும் தமிழ் அரசியல்வாதிகள் மீண்டெழுந்துவருவதுடன், வடக்குக் கிழக்கைப் பரதிநிதித்துவப்படுத்தும் சகல தமிழ் அரசியல் கட்சிகளையும் எவ்வித பாகுபாடுகளும் இன்றி ஒரே தலைமைத்துவத்தின்கீழ் ஒன்றிணைந்து இனிவரும் தேர்தல்களை ஒன்றாகச் சேர்ந்து எதிர்கொள்வோம் என்ற திடசங்கல்;பத்துடன் திரண்டெழுந்தால் இழந்து கொண்டிருக்கின்ற எங்கள் பாராளுமன்ற ஆசனங்களையும், இழக்கப் போகின்ற மாகாண சபைகளையும், நகர சபைகளையும்,பிரதேசசபைகளையும் மீட்டெடுக்கலாம் என்ற நம்பிக்கையோடு செயறபடுவோம்.

• • •

## நாடாளுமன்றத் ... தொடர்ச்சி ...

கருணாவுடன்மேற்கொள்ளப்பட்டஉடன்பாட்டை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

இங்கு நான் தமிழ்ப் பிரதிநிதித்துவம் எனக் குறிப்பிடுவது தமிழர் பிரதிநிதியாக வருதலை அல்ல. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்டவர்கள் பிரதிநிதிகளாக வருதலையே குறிப்பிடுகிறேன்.

15. வடக்கில் NPP முன்னணியில் வந்தமையினை ‘ வடக்கில் தமிழ் மக்கள் இனவாதத்தைப் புறந் தள்ளிருக்கிறர்கள்’ என NPP இன் டில்வின் சில்வா கூறியிருப்பதாக ஊடகச் செய்தி ஒன்றில் கண்டேன்.

**இக் கூற்றில் இரண்டு பிரச்சினைகள் உண்டு.**

1. தமிழ் மக்கள் மத்தியிலான வாக்கு எண்ணிக்கையில் தமிழ்த் தேசிய நிலைப்பாடுதான் இப்போதும் முன்னிலையில் நிற்கிறது.

2. நாங்கள் தேசம்/ தேசிய இனம் என நாம் எம்மை அடையாளப்படுத்துவது அனைத்துலகச் சட்டங்களின் பாற்பட்டதும், லெலின் முதல் பெனடிக்ட் அன்டேர்சன் வரையிலான தலைவர்களாலும், அறிஞர்களலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட எமது உரிமையுன் பாற்பட்டதேயன்றி, அது இனவாதமல்ல.

16. மேலே குறிப்பிட்ட விடயங்களைத் தொகுத்துப் பார்க்கும் போது தமிழத் தேசிய நிலைப்பாடு தோல்வியடைந்துருக்கிறது என்ற கூற்று பொருத்தமற்றது என்பது நன்கு தெரிகிறது. இந்நிலைப்பாடு நெருக்கடிக்குள்ளாகி இருக்கிறது என்று கூறலாம்.

மேலும், NPP க்கு வாக்களித்தவர்களிடம் தனியாக ஒரு கருத்துக் கணிப்புவைத்து ஈழத் தமிழர் வரு தேசம்/ தேசிய இனம் என்பதனை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டால் பெரும் பாலானோர் ஓம் என்றுதான் பதிலளிப்பர். நடாளுமன்றத் தேர்தலில் பலர் கொள்கையை மட்டும் பார்த்து வாக்களிப்பது இல்லை என்பது ஒரு அரசியற் பிரச்சினை.

தற்போதுள்ள நிலையை வந்த பின் காப்போன் நிலை எனப் புரிந்து, இதற்கு என்ன செய்யப்பட வேண்டும் என்பது உரையாடப்பட வேண்டும்.

17. பொருளாதாரத்தில் Joseph Shumpeter முன்வைத்த creative destruction என்ற கோட்பாடு ஒன்று உண்டு. இதனைப் ‘பழையன கழிதலும் புதியன புகுதலும்’என்பதற்கு நிகராகப் பார்க்கலாம். இங்கு பழையன, புதியன என்பவை ஆட்களைக் குறிப்பவை அல்ல. புத்தாக்கத்தையும், புதிய பண்பாட்டையும் குறிப்பன. எமது ஈழத் தமிழ் தேச நிர்மாணத்துக்கும் இக் கோட்பாட்டுச் சிந்தனை உதவும்.

• • •